ஆசிரியர் பணியை அழகுறச் செய்வோம்

மூதூர் முகைதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பணியை அழகுறச் செய்வோம்

தொகுப்பு

மூதூர் முகைதீன்

வெளியீடு

மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AUTHOUR	:	A.M. Mohideen
COPIES	:	500
PUBLICATION	:	July 2006
PRINTING	:	sasnas (Rifan) Arabic College Road, Mutur – 05
PUBLISHED BY	:	Mutur Kalai Ilakkiya Onriam
PRICE	:	75/-
COPYRIGHT	:	A.M. Mohideen Konx Road, Mutur - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

பாடசாலையின் அபிவிருத்தியிலும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் மாற்றத்தையும் மேம்பாட்டினையும் காணும்நோக்கில் கல்வியியலாளர்களால் காலத்திற்கு காலம் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் அதிபர் ஜனாப் ஏ.எம். முகைதீன் அவர்களினால் ***"ஆசிரியர் பணியினை அழகுறச் செய்வோம்"*** என்ற நூல் எம்மால் வெளியிடப்படுகிறது. இது ஆசிரியர்களுக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்நூலினை ஆசிரியர்கள் வாசித்து அறிவதன்மூலம் தங்கள் பணியை மேலும் செம்மையாகவும் பயனுறுதிமிக்கதாகவும் செய்ய முடியும் என நம்புகிறோம். அந்த வகையில் இதனை எமது மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் சார்பாக வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஏற்கனவே எமது ஒன்றியத்தின் சார்பில் பல நூல் வெளியீடுகளும், மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்குகளும், மாதிரிப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் கல்விசார் நூல் ஒன்றை முதலில் வெளியிடுவதில் பெருமிதம் அடைகின்றோம். ஏற்கனவே எமது நூல்களுக்கு அளித்த வரவேற் பினைப்போல் இதற்கும் கல்விசார் உலகம் தனது ஆதரவையும், வரவேற்பினையும் வழங்கும் என பெரிதும் எதிர்பார்த்துள்ளோம்.

மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்
தொக்கஸ் வீதி,
மூதூர்.
2006. 07. 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

எமது வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் ஜனாப் ஏ.எம். முகைதீன் இலங்கை அதிபர் சேவை தரம் - 1 ஐச் சேர்ந்த அதிபராவார். பல பாடசாலைகளில் அதிபராகக் கடமை யாற்றி தான் பெற்ற அனுபவத்தையும் கற்றறிந்த விடயங்களையும் கொண்டு இந்நூலை வெகு சிறப்பாக தொகுத்துள்ளார்.

ஆசிரியர் பணியினை அழகுறச் செய்வோம் என்ற தலைப்பிற்கு ஏற்ற வகையில் பொருத்தமான பயனுள்ள பல விடயங்கள் இதில் உள்ளடங்கியுள்ளன. ஆசிரியர்கள் தொழில் வாண்மை விருத்திபெறுவதற்கும் பயனுள்ள வகையில் தங்கள் ஆசிரியர் பணியை மேற்கொள்வதற்கும் இதிலுள்ள விடயங்கள் மிகவும் உதவிபுரியுமென நிச்சயமாக கூறலாம்.

பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ள மூதூர் முகைதீன் அவர்களின் இந்நூல் ஆசிரியர் உலகத்திற்கு, பெரிதும் பயனுடைய தாகும். எதிர்காலத்திலும் இது போன்ற பல வெளியீடுகளை இதன் ஆசிரியர் வெளியிட்டு வைக்கவேண்டுமென கூறி எனது வாழ்த்துக் களைத் தெரிவிக்கிறேன்.

ஜனாப். ஏ.எல். அப்துல் குத்தூஸ்
வலயக்கல்விப் பணிப்பாளர்,

வலயக் கல்வி அலுவலகம்,
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை

ஆசிரியர்களின் தொழில் வாண்மையை உயர்த்தி அவர்களை சிறந்த ஆசிரியர்களாக வழிப்படுத்தும் திட்டங்களை எமது மாகாணக் கல்வித் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்கு மேலாக பல கல்வியலாளர்களும் நூல்கள் பலவற்றை வெளியிட்டு வைத்துள்ளனர்.

ஆசிரியர் பணியைப் பற்றி எழுத்தாளரும் அதிபருமான மூதூர் முகைதீன் அவர்களும் இந்நூலில் பல சிறப்பான தகவல்களையும், கருத்துக்களையும் தொகுத்து வழங்கியுள்ளார். இது ஆசிரியர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என நிச்சயமாக கூறலாம். இந்நூலை தொகுத்தளித்த ஜனாப். மூதூர் முகைதீன் அவர்களுக்கும் வெளியிட்டு வைத்த மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்திற்கும் எனது பாராட்டுக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. வீ. இராசையா,
மேலதிக மாகாணக் கல்வி பணிப்பாளர்,

வ.கி. மாகாண கல்வித் திணைக்களம்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பாசிரியரிடமிருந்து ....

கல்வித்துறையில் நவீன கண்டுபிடிப்புக்களும் புதிய புதிய மாற்றங்களும் ஏற்பட்டுவரும் இன்றைய கால கட்டத்தில் அதன் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆசிரியர் வாண்மையும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமானதொரு விடயமாகும்.

இன்றைய சூழலில் கற்றல் கற்பித்தல் செயற்பாடு என்பது பழுமிக்க சுமையான செயற்பாடாகவும் அதே வேளையில் ஆவணப் பயன்பாடு பேணலில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலையிலும் உள்ள துறையாகவும் காணப்படுகின்றது. இது கல்விசார் துறையில் உள்ள சகல மட்டங்களுக்கும் பொதுவானதாக இருப்பதால் ஆசிரியர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர்.

இன்று கல்வி உலகில் ஏற்பட்டுவரும் புதிய பரிமாணங்களின் வேகத்திற்கு ஏற்ப நாமும் எம்மைத் தயார்படுத்தாவிட்டால் எமது தொழிற்திறனும் ஆளுமையும் பாதிக்கப்பட்டு தொடர்ச்சியான பணிக்கு எம்மால் எதிர்காலத்தில் முகம் கொடுக்க முடியாத சூழல் ஏற்படலாம்.

எனவே, இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர்கள் தினமும் புதிய புதிய விடயங்களை அறிவதிலும் தேடிப்படிப்பதிலும் நாட்டமுடையவர்களாக இருக்கவேண்டிய அவசியத்தில் உள்ளனர். இப்பணியை பயனுறுதியும் வினைத்திறனுமிக்கதாகப் புரிவதற்கு சேற்படி செயல்பாடுகள் இன்றி அமையாதனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால கல்வி நீரோட்டத்தில் நாம் விரும்பியோ விரும்பாமலோ இதனை நிறைவேற்றுவதற்கு நம்மை நாம் தயார் படுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. இதனை நோக்காகக் கொண்டே பல இடங்களுமிருந்தும் பெறப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் கொண்டு இத்தொகுப்பு வெளியிடப்படுகிறது. இதிலுள்ள தகவல்கள் கல்வி அமைச்சு, பல்வேறு கல்வித் திணைக்களங்களின் சுற்றுநிருபங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் **அன்பு ஜவகர்ஷா** (அதிபர்) அவர்களின் வெளியீடுகளிலிருந்தும் பெறப்பட்டவையாகும். அவர்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.

ஆசிரியர் சேவையில் தற்போது புதிய புதிய திருத்தங்களும் மாற்றங்களும் இடம் பெற்றுவருவதால் இதில் உள்ள விடயங்கள் மாற்றங்களுக்குட்படலாம் என்பதையும் முக்கியமாக தெரிவித்துக் கொண்டு இந்நூல் வெளிவர உதவிய சகலருக்கும் மீண்டும் நன்றிகளைக் கூறி உங்களின் கருத்துக்களையும் எதிர்பார்த்து விடைபெறுகின்றேன்.

ஏ.எம். முகைதீன்

வலயக் கல்வி அலுவலகம்,
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலம் அருள் தெய்வம்

கொள்கை மேன்மை

கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை

நிலம் மலை நிறைகோன்

மலர்நிகர் மாட்சியும்

உலகியல் அறிவோடு

உயர்குணம் இணையவும்

அமைபவனே நல்லாசான்.

(பவணந்திப் புலவர் – நன்னூல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நல்லாசிரியரராயின்...

1. ஆசிரியப் பணி மிக உன்னதமான சேவை என்பதனை மனதிற் கொண்டு நடந்து கொள்வீர்கள்.
2. உங்கள் பிள்ளையின் கல்வி மற்றும் விடயங்களின் அபிவிருத்தி தொடர்பாகக் கொண்டுள்ள அக்கறையை ஏனைய பிள்ளைகள் தொடர்பாகவும் காட்டுவீர்கள்.
3. பாடசாலை நடைபெறும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்திலும் மாணவர்களுக்காகவும், பாடசாலைக்காகவும் அர்ப் பணிப்புடன் செயற்படுவீர்கள்
4. ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் ஆற்றுவதால் தமது தனிப்பட்ட வேலைகளைப் பெரிது படுத்த மாட்டீர்கள்.
5. பாடசாலை செல்வதற்கு முன்னரே கற்பித்தல் நடவடிக்கை களுக்கான முன் ஆயத்தங்களை செய்து கொள்வீர்கள்.
6. வேலைத்திட்டம் (scheme of work) பாடக் குறிப்பு (notes of lesion) ஆகியவற்றை ஒழுங்கு செய்துகொண்டு கற்பித்தலை வெற்றிகரமாக நடத்தி முடிப்பீர்கள்
7. கற்றல் கற்பித்தல் செயன் முறைக்குத் தேவையான துணைச்சாதனங்கள் தகவல்கள். போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதிலும் திரட்டுவதிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.
8. நடை உடை பாவனைகளில் முன்மாதிரியாக இருப்பீர்கள்
9. பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்பே அங்கு சமுகமளித்து விடுவீர்கள் சிவப்பு கோட்டுக்கு கீழே கையப்பமிடுவது நல்லாசிரியரின் பண்பல்ல என்பதை உணர்ந்திருப்பீர்கள்.
10. பாடசாலை ஆரம்பமாவதற்கு மணி ஒலிக்கு முன்னர் வகுப்பறைக்கு சமுகளித்து மேற்பார்வையில் ஈடுபடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மாணவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பீர்கள்
12. மனம் கவரும் விதத்தில் ஒழுக்கமேம்பாட்டுடனும் முன்மாதிரி யான விதத்திலும் உரையாடுவீர்கள்
13. அதிபருடனோ சக ஆசிரியர்களுடனோ முரண்பாடுகளை வளர்த்துக்கொள்ள மாட்டீர்கள்
14. பாடசாலையிலும் சமூகத்திலும் பிரதான பங்கை வகிப்பீர்கள்.
15. மாணவர்கள் உங்களுக்குத் தரும் கௌரவத்தை பாடசாலை நிருவாகத்துக்கோ ஏனைய ஆசிரியர்களுக்கோ பிறருக்கோ இடையூறு விளைவிப்பதற்கு பயன்படுத்த மாட்டீர்கள்.மாறாக பாடசாலையினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்துக்காகவே பயன்படுத்துவீர்கள்.
16. கற்பித்தல் செயற்பாடுகளில் மாத்திரமின்றி ஏனைய செயற் பாடுகளிலும் அக்கறையுடன் கலந்து கொள்வீர்கள்.
17. நீங்கள் வகுப்பறைக்குச் சென்றதும் மாணவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அக்கறையையும் ஆர்வத்தையும் காட்டுவார்கள். மிகச் சுறுசுறுப்பாகவும் விருப்பத்தோடும் கற்றலில் ஈடுபடுவார் கள். பாடம் முடிந்ததும் மன நிறைவுடன் செல்வார்கள்.
18. மணியடித்ததும் தாமதிக்காமல் அடுத்த பாடத்தை நடத்து வதற்காக செல்வீர்கள்
19. வகுப்பில் ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு கற்பிக்க மாட்டீர் கள் மாணவரை கவனமாக கண்காணித்தவாறு கற்பித்தலை நடத்துவீர்கள். மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களுக்கிடையில் நடமாடியவாறு கற்றலுக்கான உதவி களையும் மதிப்பீடுகளையும் கண்காணிப்பையும் செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஓய்வான பாடவேளையில் ஆசிரியர் சமுகமளிக்காத வகுப் பறைக்குச் சென்று கற்பித்தல் நடவடிக்கையிலோ மேற்பார்வை நடவடிக்கையிலோ மாணவருக்கு உதவும் நடவடிக்கையிலோ. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலோ ஈடுபடுவீர்கள்.

21. நீங்கள் ஓய்வாகஇருப்பதை அறிந்தால் மாணவர்கள் உங்களை ஆர்வத்துடன் நாடிவந்து தமது வகுப்புக்கு வறுமாறு அழைப் பார்கள்

22. உங்களிடம் கற்கும் பாடத்தைக் கற்பதற்காக மாணவர்கள் பிரத்தியேக தனியார் வகுப்புக்களை நாடிச்செல்லமாட்டார்கள்.

23. உங்களது வகுப்பு தூய்மையும் அழகும் ஒழுங்கும் கொண்ட தாக இருக்கும்.

24. உங்களின் பாடத்துக்கான மாணவரின் பயிற்சிக் கொப்பிகள் வேறு உபகரணங்கள் போன்றவை முறையாகப் பேணப் பட்டுள்ளதா என்பதை அவ்வப் போது பரிசிலித்துப்பார்ப்பீர்கள்.

25. பொதுவாக பாடசாலையின் புனிதம் மாணவர் ஒழுக்கம் போன்ற பல்வேறு விடயங்களிலும் அக்கறையுடனும் பொறுப் புடனும் ஈடுபாடு காட்டுவீர்கள்.

ஆசிரியர் பணி என்பது ஒரு தொழிலல்ல.மனம் வைத்து முழு ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுகின்ற ஒரு உயர்ந்த சேவையாகும் உண்மையான ஆசிரியரின் கூலியை யாராலுமே நிர்ணயிக்க முடியாது அந்த அளவிற்கு ஆசிரியர் தொழில் உன்னதம் வாய்ந்தது.

ஆசிரியன் கற்பிப்பவன் மட்டுமல்ல எப்பொழுதும் கற்றுக் கொண்டிருப்பவன். அவனே சிறந்த ஆசிரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் ஒருவர் எப்படி இருக்க வேண்டும்.

ஒரு சிறந்த ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என கல்வியில் அறிஞரான லூயிஸ் கொகலே கீழ் வருமாறு கூறியுள்ளார்.

1. முகாமையாளர்
2. அவதானிப்பாளர்
3. இனங்காண்பவர்
4. கல்வி ஊட்டுபவர்
5. ஒழுங்கமைப்பாளர்
6. முன்வைப்பவர்
7. தொடர்பாடல் செய்பவர்
8. உதவுபவர்
9. ஊக்குவிப்பவர்
10. ஆலோசகர்
11. மதிப்பீட்டாளர்

நல்லாசிரியரின் பண்புகள்

முகமலர்ச்சி நடுநிலமை

நல்லபிமானம் பரந்த அறிவு

சமூக இசைவு தலைமைத்துவம்

ஒத்துழைப்பு தன்நம்பிக்கை

வசீகரமான குரல் சுறுசுறுப்பு

சிநேகித மனப்பான்மை மனத்தைரியம்

சரியான முடிவெடுத்தல் மனக்கட்டுப்பாடு

வசீகரிக்கும் தன்மை நலன் விரும்பும் மனப்பான்மை

நிபுணத்துவம் ஆக்க முயற்சிகளை ஆரம்பிக்கும் திறன்

தன்னலமற்ற சேவை மனப்பான்மை

நேசத்துக்கு தொழில் புரிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TEACHER

T -	Training	-	பயிற்சி
E -	Education	-	கல்வி
A -	Ability	-	திறமை
C -	Creativity	-	படைப்பாற்றல்
H -	Humanity	-	மனிதம்
E -	Efficiency	-	வினைத்திறன்
R -	Reformer	-	சீர்திருத்தவாதி

மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் பேசுவானாயின் உலகில் அமைதி நிலவும்.

* * *

கற்பித்தல் தொழிலை வெற்றிகரமாக நடாத்துவதற்கு குழந்தைகளின் நடத்தைகளை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பது அவசியமாகின்றது. எனவே ஆசிரியர்கள் தமது கற்பித்தலோடு மாணவரின் நடத்தைக் கோலங்களையும் அவதானித்து எவ்வாறு கற்பித்தலை மேற் கொள்ளலாம் என்று உணர்ந்து கற்றலொழுக்கத்தை தீர்மானிக்கவும் கற்றுக்கொள்பவனே சிறந்த ஆசிரியனாவான்.

* * *

நல்லதை விதை. தீயதை புதை.

உண்மையான அர்ப்பணிப்பு உணர்வோடு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இறைவனின் ஞான ரகசியங்கள் வெளியாக்கப்படுகின்றன.

(யூ.எல்.எம். அலியார் அவர்களின் கல்விச் சிந்தனைகள் நூலிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் லீவு

ஆசிரியர் லீவு என்பது அதை எடுப்பவரைத் தவிர மற்றைய பாடசாலையைச் சமூகத்தைச் சேர்ந்த சகலருக்கும் உவப்பில்லாத ஒரு விடயமாகும் தினமும் 30 தொடக்கம் 35 வரை சதவீதமான ஆசிரியர்கள் லீவில் நிற்பதாக குறைபாடு தொரிவிக்கப்படுகிறது. சுமார் 60.000 ஆசிரியர்கள் தினமும் லீவில் நிற்கின்றனர் என்று சொல்லப்படுகிறது

ஆசிரியர்களுக்கு விடுமுறை ஒரு உரிமையன்று. அது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஒரு சலுகையாகவே கருதப்படுகிறது. சேவையின் முகாமைத்துவத்தையும் அவசரத் தன்மையையும் கருதியேவிடுமுறை வழங்கப்படுகிறது .இதனால் அனுமதிக்கப்பட்ட விடுமுறையைக் குறைக்கவோ அல்லது விடுமுறையிலிருக்கும் ஒரு ஆசிரியரைச் சேவைக்கு அழைப்பதற்கோ விடுமுறையை அனுமதிக்கும் அதிகாரிக்கு உரிமையுண்டு.

லீவு ஆனது அதை எடுக்கும் முறை அனுமதித்ல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அதிபர் ஆசிரியர்கள் தெளிவு பெறாமை காரணமாக பலவித முரண்பாடுகள் உண்டாகின்றன.

ஒரு நாள் ஒரு ஆசிரியர் லீவு எடுத்தால் குறைந்தபட்சம் 11.200 மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நிமிடங்கள் வீணடிக்கப்படுகின்றன இன்று உரிமைப்போராட்டங்ள் அதிகரித்து விட்டபடியால் புதிய ஆசிரியர்களே அதிக லீவு எடுக்கின்றனர் என்பதனை பல தரவுகளிளிருந்தும் அறியக்கூடியதாக உள்ளது 30 வருட சேவைக் காலத்தில் ஒரு சில நாட்கள் லீவைப்பெற்றுள்ள ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கில் சேவையில் இல்லாமல் இல்லை. இரண்டு சாரார்களுக்கும் ஒரே நிறுவையே இருப்பதால் லீவு எடுக்காமல் சேவை செய்து என்ன பயன் என்ற கேள்வியும் எழுகிறது. .இனி லீவு வகைகளையும் லீவு எடுக்கும் முறைகளையும் அவை தொடர்பான விதிகளையும் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களுக்கான லீவைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

* சமயோசித விடுமுறை
* பிரசவ விடுமுறை
* அரைச் சம்பள, முழுச் சம்பள விடுமுறை.
* விசேட விடுமுறை
* விபத்து விடுமுறை
* கடமை விடுமுறை
* படிப்பு விடுமுறை
* இலங்கைக்கு வெளியே விடுமுறை
* குறுகிய விடுமுறை
* அரை நாள் விடுமுறை
* பரீட்சை விடுமுறை
* முன்னைய வீடுமுறை
* இத்தா விடுமுறை

அதிபரின் விடுமுறைகளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அனுமதிக்க வேண்டும். பிரசவ விடுமுறை, கடமை விடுமுறை சம்பளமற்ற விடுமுறை சுயரோக குட்டரோக விடு முறை இலங்கைக்கு வெளியே விடுமுறை விபத்து விடுமுறை போன்றவைகளில் இலங்கைக்கு வெளியே விடுமுறையைத் தவிரமற்றைய விடுமுறைகளை வலயக் கல்விப் பணிப்பாளர் அனுமதிக்கலாம். தாபனக் கோவையுடன் தொடர்புறாத கடமை லீவு போன்ற விடுமுறைகள் கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அனுமதிக்கப்படலாம்.

இலங்கைக்கு வெளியே செல்ல மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் விதப்புரையுடன் மாகாண ஆளுனர் அனுமதிப்பார் வெளிநாட்டுப் படிப்பு விடுமுறை தொடர்பாக கல்வியமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எதிர்கால சந்ததியினரை வாழ்க்கைக்குத் தயாராக்கும் பணியே ஆசிரியத்துவத்தின் அடிப்படை நோக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயோசித விடு முறை

நிரந்தர சேவையில் இருக்கும் ஆசிரியர்களும் அவசர சொந்த தேவைகளுக்காக வருடமொன்றுக்கு 21 நாட்கள் இந்த விடுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த விடுமுறையை விடுமுறை கோரும் தினத்துக்கு 7 நாட்களுக்கு முன் அதிபருக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

வருடம் ஒன்றுக்கு முழுச் சம்பளத்துடன் 21 நாட்கள் பெற முடியும் ஒரே முறையில் 6 நாட்களுக்கு மேல் இவ் விடுமுறையைப் பெற்றுக்கொள்ள முடியாது அத்தியவசிய தேவைகளுக்கு 6 நாட்கள் பெற்றுக் கொள்ளலாம். சமயோசித விடுமுறை வழங்கக் கூடிய காரணங்கள் வருமாறு.

1. விண்ணப்பதாரியின் சுகவீனம்.
2. குடும்பத்தாரின் கடுமையான சுகவீனம் அல்லது மரணம்
3. குற்றவியல் அல்லது அரசாங்க வழக்குத்தவிர்ந்த ஏனைய வழக்குகளின் பொருட்டு நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கு.
4. ஆசிரியரின் விவாகம்
5. கல்வித் திணைக்களத்தின் தொழில் சார்ந்த பரீட்சைகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு.
6. விண்ணப்பதாரியின் சொந்த நலன் கருதிய உத்தியோக ரீதியான நேர்முக உரையாடலுக்கு அலுவலகத்தால் அழைக்கப்படும் போது.

விடுமுறைகள் கணிக்கப்படும் போது சனிக்கிழமை ஞயிற்றுக்கிழமை மற்றும் பகிரங்க விடுமுறைகள் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.

- குழந்தையை வளர்த்தல் விடுமுறை
- இத்தாட விடுமுறை
- பயிலுனர் ஆசிரியர் விடுமுறை
- கட்டாய விடுமுறை

இவ்வாறு பல விதமான லீவுகளை ஆசிரியர் பெற்றுக்கொள்ளலாம். இவைகளோடு தாமதமாக வருதல், குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஆசிரியர்களும், அதிபர்களும் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களை நிறைய இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை கோரும் போது பின்வரும் தகவல்களைக் கொண்ட விண்ணப்பத்தில் கோருதல் வேண்டும்.

* விண்ணப்பதாரியின் பெயர்
* தேவையான விடுமுறை நாட்கள்
* தேவையான விடுமுறை நாட்களின் எண்ணிக்கை
* விடுமுறைக்கான காரணம்
* மீண்டும் சேவைக்கு வரும் திகதி
* விடுமுறை சமயோசிதமா? சுகயீனமா? கடமையா? என்பது பற்றிய விபரம்
* விண்ணப்பதாரியின் கையொப்பம்
* திகதி

இவற்றை உள்ளடக்கியதாக இவ்விண்ணப்பப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் விண்ணப்பப் படிவம் அரசாங்கத்தால் அல்லது பாடசாலை நிருவாகத்தால் வழங்கப்படுதல்வேண்டும்

விடுமுறையில் செல்லும் முன்னர் கோரிய விடுமுறை அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் இரண்டு பிரதிகளில் விண்ணப்பித்து ஒரு பிரதியை விண்ணப்பதாரி வைத்திருத்தல் பாதுகாப்பானது.

முன்னறிவித்தலின்றி சேவைக்கு வராதிருத்தல் தன்னைத் தானே சேவையிலிருந்து அகற்றிக் கொண்டதற்குச் சமனாகும் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் விடுமுறையில் நிற்க நேரிட்டால் அன்றே பாடசாலை மூடுமுன்னர் அதிபருக்கு அறிவித்தல் கொடுத்து கூடிய விரைவில் அதற்குரிய முறையான விண்ணப்பப் பத்திரத்தில் அனுமதி பெற வேண்டும் தந்தியடித்தல் ஒரு முறையாகும் ஆனால் இதை தொடர்ந்து செய்ய முடியாது.

அவசரமாக உண்டாகும் சுகயீனத்திற்காக முதல் தினம் லீவு அனுமதிக்காமல் லீவு பெற வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டாவதுண்டு இப்படியான சந்தர்ப்பங்களில் பதிவுத்தபாலில் லீவு கோரி அதிபருக்கு ஒன்று அனுப்புதல் வேண்டும் தந்தி மூலம் இப்படிக் கோரினாலும் இவை லீவு விண்ணப்பங்ள் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும் மறு நாள் முறையான லீவு விண்ணப்பத்தில் லீவு அனுமதிக்கப்படல்வேண்டும்ஆசிரியர்களின் சமயோசித சுகயீன விடுமுறைகளை பாடசாலை அதிபர் அனுமதிப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகவீன விடுமுறை

நிரந்தர ஆசிரியர்கள் 20 நாட்கள் இந்தவிடுமுறையை பெறலாம் 2 நாட்கள் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் இன்றியும் அதன் பின்னர் அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம் முன்னர் 14 நாட்களுக்கு மேல் இதனைப் பெறுவதனால் அரசாங்க வைத்திய அதிகாரியின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும் தற்போது பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இல 29/92(1992.10.07திகதி)27/92 (1) (1992.11.11திகதி) ஆகியவற்றின் படி பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியர் ஒருவரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்து தேவைப்பட்ட எவ்வளவு நாட்களுக்கும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம் அனுமதிக்கப்படும் நாட்களின் பின்னர் எடுக்கப்படும் விடுமுறையானது விதிமுறையின் படி சம்பளத்துடன் கூடிய அல்லது சம்பளமற்ற அல்லது அரைச் சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக கணிக்கப்படும்.

பிரசவ லீவுகளை அனுமதிக்கும்போது நிரந்தர தற்காலிக சம்பளம் பெறும் அமைய உத்தியோகத்தர்கள்மற்றும் பயிலுனர்கள் தொடர்பில் முழுச் சம்பளத்துடன் 12 வாரகால அல்லது 6 வாரகால பிரசவ லீவை மிகுதியாக உள்ள அவரது லீவுகளிலிருந்து கழித்தலாகாதுடன் இதை முழுச் சம்பளத்துடன் விசேட லீவாகக் கருத வேண்டும் உயிரற்ற குழந்தை பிரசவமாயிருப்பின் குழந்தையின் மரணச் சான்றிதல் அல்லது மருத்துவச் சான்றிதல் சமர்ப்பித்து விசேட லீவாக 4 வாரகால லீவைப் பெறமுடியும். கருச்சிதைவு காரணமாக (Abortion and carriage) லீவு தேவைப்படுமாயின் மருத்துச் சான்றிதழின் கீழ் உத்தியோகத்தருக்குரிய ஓய்வு லீவுகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் இந்தப் பிரிவின் கீழ் அனுமதிக்கப்படும் பிரசவ லீவுகள் முடிவடைந்த பின் (84நாட்கள் அல்லது 42நாட்கள்) தான் குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டும் பொருட்டு பொதுவாக சேவை நிலையத்தை விட்டுச் செல்லும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலயத்துக்கு முன் சேவை நிலையத்திலிருந்து செல்ல அவர்களுக்கு அனுமதியளிக்க வேண்டும் குழந்தை பிறந்த நாள் முதல் (05)ஐந்து மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டும் இவ்வனுமதி வழங்கப்படல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் மேற்படி 07 ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள சலுகையானது ஆசிரியைகளின் சேவைக்காலம் 6 மணித்தியாலையம் என்றபடியால் அவர்களுக்கு அந்த சலுகையை வழங்க வேண்டிய அவசியமில்லையென கல்வி உயர் கல்வி அமைச்சரின் மேலதிக செயலாளர் சேனாசாயக்க உபசேன அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓய்வு விடுமுறை

பாடசாலைத் தவணை விடுமுறைக் காலங்களிலேயே ஆசிரியர் இவ்விடுமுறைக்கு உரித்துடையவர் குறிப்பிட்ட ஓர் ஆண்டில் ஒரு நாள் வேலை செய்கிருப்பினும் பாடசாலை விடுமுறைக் காலத்துக்கு முழுச் சம்பளத்திற்கும் உரித்துடையவர்.

அரைச் சம்பள முழுச் சம்பள விடுமுறை

ஆசிரியர் சுகவீனம் காரணமாக அரைச்சம்பள விடுமுறைக்கு உரித்துடையவரல்லர். ஓர் ஆசிரியர் பகிரங்க விடுமுறை சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னுள்ள கடைசி வேலை நாளிற் சம்பளமற்ற விடுமுறையில் நின்று இந்நாட்கள் முடிந்து வரும் முதல் வேலை நாளில் கடமைக்குச் சென்றால் அவருக்கு குறிப்பிட்ட பதிரங்க விடுமுறை சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை முழுச்சம்பளம் வழங்கப்படும். இல்லையேல் சம்பளமற்ற விடுமுறையாகவே கணிக்கப்படும்.

விபத்து லீவு முடிவடைந்த பின் 6 மாத காலம் அரைச்சம்பள லீவைப்பெற்றுக் கொள்ளலாம் இது தொடர்பான தகவல்கள் விபத்து லீவின் கீழ் வருகின்றன அத்தோடு ஒழுக்க காரணங்களுக்காக சேவையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்படும் ஆசிரியர்களுக்கு அரைச்சம்பள லீவு வழங்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு

> **மாணவ மாணவியரின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து வாழ்வின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண ஆயத்தம் செய்து பக்குவப்படுத்துவதே சிறப்பான கல்வியாகும்**
>
> **(மகாத்மா காந்தி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட விடுமுறை

சில நோய்களுக்கு விசேட லீவு அனுமதிக்கப்படுவதுண்டு அதன் படி சயரோகத்திற்காக முழுச்சம்பளத்துடன் 9 மாதங்கள் 2 வெவ்வேறு காலங்களில் இந்த விடுமுறையைப் பெற்றுக் கொள்ளலாம் முதல் முறை லீவு எடுத்த பின் 4 வருடங்கள் சேவையாற்றிய பின்னரே மறுமுறை லீவைப் பெறலாம்.

குஷ்டரோகத்திற்காக முழுச் சேவைக் காலத்திலும் ஒரு முறை மட்டுமே முழுச்சம்பளத்துடன் விடுமுறையை பெற்றுக் கொள்ளம் மேற்சொல்லப்பட்ட விடுமுறைகளை பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட நோய்களுக்காக வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்க அறிக்கை இலக்கம் 32/93 (93.12.24.) திகதியின் படி வைத்தியசாலையினால் பரிந்துரை செய்யப்படும் சத்திர சிகிச்சையின் பின்னர் பராமரிப்பதற்காக சம்பளத்துடன் கூடிய 6 மாத லீவைப் பெற்றுக்கொள்ளலாம்

விபத்து விடுமுறை

தாபனக் கோவையில் 9 ஆம் பிரிவின் 9 ஆவது உப பிரிவு 1993.09.21.திகதி அரசாங்கசுற்றறிக்கை இலக்கம்22..93 படி திருத்தப்பட்டுள்ளது 1. கடமையை நிறைவேற்றும் போது அல்லது 2. கடமையை நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்திலும் 3. பொதுவாக விடயத்துக்குட்பட்ட ஏதாவது செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அல்லது 4. வதிவிடத்திலிருந்து கடமைக்குச் செல்லும் போது கடமை ஸ்தானம் வரை அல்லது 5. கடமை நிலையிலிருந்து கடமைக்காக செல்லும் போது அல்லது சேவை நிலையத்துக்கு மீண்டும் வரும் போது உண்டாகும் அவசர விபத்துக்காக நஷ்டஈட்டையும் விடுமுறையையும் பெற்றுக் கொள்ளலாம்..

புத்தகங்களை நீ எழுதினால் புகழ்பெறுவாய்
அதைவிடச் சிறந்தது உன்னைப் பற்றிய
புத்தகங்கள் எழுதப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர விபத்து நடைபெற்றவுடன் காயமடைந்த ஆசிரியரை அதிபர் வைத்திய சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும் லொக் புத்தகத்தில் இது பற்றி குறிப்பிட வேண்டும் காயத்தின் படியும் வைத்திய சபையின் சிபாரிசின் படியும் பின்வருமாறு விடுமுறை அனுமதிக்கப்படும் 1. ஒரு வருடத்திற்கு முழுச் சம்பளத்துடன் விடுமுறை. அதன் பின்னர் 6 மாத காலத்திற்கு அரைச் சம்பளத்துடன் விடுமுறை 2. மேல் 1 இல் சொல்லப்பட்ட ஒரு வருட லீவுற்கு மேலதிகமாக தமக்குரிய லீவைப் பெற்றுக் கொள்ள ஆசிரியருக்கு அனுமதியுண்டு.

கடமை விடுமுறை

கடமை விடுமுறை பின்வரும் காரனங்களுக்காக வழங்கப்படும் 1. குற்றவியல் வழக்குகளில் சாட்சி சொல்வதற்கு 2. யூரி சபையிற் கடமையாற்றுவதற்கு 3. படைப் பயிற்சிக்கு செல்வதற்கு 4. முன்னிற்கும் படைக்கடமைக்கு அழைக்கப்படல் 5. சாரணர் கொண்டாட்டம் விஞ்ஞான சங்க கூட்டம் திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் என்பன வற்றிற்கு பங்கு பற்றுவதற்கு 6. திணைக்களத்தால் நடத்தப்படும் புத்தூக்க வகுப்புக்களுக்கு செல்வதற்கு 8. கல்விப்பணிப்பாளரின் அங்கிகாரத்துடன் பரீட்சை மேற்பார்வையாளராக அல்லது நோக்குனராக கடமை புரிவதற்கு 9. கல்வி விடயம் சம்மந்தமாக அமைச்சரால் அல்லது செயலாளரால் அழைக்கப்படல். 10. தொழிற் சங்கங்களின் வருடாந்த பொதுக் கூட்டங்களில் செல்வதற்கு

படிப்பு விடுமுறை

ஆசிரியர் கலாசாலையிற் பயிற்சி பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே ஓர் ஆசிரியர் அவ் விடுமுறைக்கு உரித்துடையவர் ஆவார் முழுச்சம்பளத்துடன் 2 வருடங்களுக்கு இவ் விடுமுறை வழங்கப்படும் இப்பயிற்சியை முடிவு செய்த பின் குறைந்த பற்சம் 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

நாடுகளில் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் ஆசிரியர்கள்
- பேராசிரியர் ஹுமாயூன் கபீர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம்

ஓர் ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிக்கான பயிற்சிக்கு அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டால் முழுச்சம்பளத்துடன் 2 வருடங்களுக்கு சம்பளமின்றி 1 வருடமும் விடுமுறையாகப் பெறலாம் படிப்பை முடித்த பின்னர் குறைந்த பட்சம் 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

கல்வித்தகுதித் தேர்வுப்பத்திரம்

இதற்கென தெரிவு செய்யப்பட்டால் முழுச்சம்பளத்துடன் ஒரு வருடம் விடுமுறையாக வழங்கப்படும் குறைந்த பட்சம் 5 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் படிப்பு முடித்த பின் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் இவைகளை விட தொலைக்கல்வி உட்பட பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் இரு நாட்கள் லீவுகள் வழங்கப்படுகின்றன தொலைக்கல்வி பயிற்சி பல்கலைக் கழக பாடநெறிகள் பட்ட நெறிகள் பட்ட பின்படிப்பு கல்விமாணிப்பட்டப்படிப்பு பிரின்செட் ஆங்கில பயிற்சி நெறி போன்ற பல்வேறு தொலைக்கல்வி பயிற்சி நெறிக்காக கற்றல் விடுமுறைகள் வழங்கப்படுகின்றன

இலங்கைக்கு வெளியே விடுமுறை

இவ்விடுமுறையை பாடசாலை விடுமுறை நாட்களில் பெற்று கொள்ளலாம் பாடசாலை விடுமுறை தவிர்ந்த மற்றைய நாட்கள் சம்பளமற்ற விடுமுறையாக கருதப்படும் வைத்திய தேவை புண்ணியஸ்தலங்களைத் தரித்தல் போன்ற காரணங்களுக்காக இவைகளை பயன்படுத்துகின்றனர்.

குறுகிய விடுமுறை

8.00 மணி முதல் 2.00 மணி வரை சேவையாற்றும் பாடசாலை நேரத்திற்குட்பட்டதாக மாதத்திற்கு இரண்டு முறை குறுகிய நேர லீவு பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைப் பாடசாலை தொடங்கும் போதோ அல்லது முடியும் கட்டத்திலோ பெற்றுக்கொள்ள முடியாது பாடசாலை தொடங்க முன்னர் இது சில பாடசாலைகளில் வழங்கப்படுகிறது இது தவறாகும் பாடசாலை தொடங்கி அரை மணி தாமதமாக வந்தால் அது அரை நாள் விடுமுறையாக கருதப்பட வேண்டும்

அரை நாள் விடுமுறை

அரை நாள் லீவு பெறுவதற்கு குறைந்த பட்சம் பாடசாலை நேரத்தில் அரைப்பகுதி அல்லது நான்கு மணி நேரம் அதில் எது அதிகமானதோ அந்தளவு வேலை செய்திருக்க வேண்டும் காலையில் அரை நாள் லீவு வழங்க முடியாது என தேசிய பாடசாலைக்கு பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளர் கூறுகின்றார்.

பரீட்சை விடுமுறை

தொலைக்கல்வி இறுதிப்பரீட்சைகள் பட்டப்பின் படிப்புப்பரீட்சைகள் இவைகளுக்காக 10 நாட்கள் இரண்டு வாரம் என இத்தகைய விடுமுறைகள் வழங்கப்படுகின்றன பரீட்சை அனுமதி அட்டைகளை சமர்ப்பித்து அவைகளைப் பெற்றுக்கொள்ளாம்

முன்னைய விடுமுறை

ஆசிரியர்களின் சுகவீன விடுமுறை முடிந்தவுடன் மேலும் விடுமுறை தேவைப்படின் முன்னர் உள்ள இரண்டு வருடங்களில் மிகுதியாய் உள்ள சுகவீன விடுமுறைகளை பெற்றுக் கொள்ளலாம் ஆனால் ஆசிரியர்கள் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் சுகவீனமுற்றால் முன்னை தொடர்ந்து நான்கு வருடங்களில் மிருதியாக உள்ள சுகவீன விடுமுறைகயை பெற்றுக் கொடுக்க செயலாளருக்கு முடியும்.

தாபனக்கோவை 7ம் பிரிவு 10ம் உப பிரிவு

எப்படியாக இருந்த போதிலும் முன் வருடங்களில் மீதப்படுத்தப்படும் சமயோசித விடுமுறைகளை இவ்வாறு பெற்றுக் கொள்ள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை வளர்த்தல் விடுமுறை

நயாரத்தின குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்தும் திட்டத்தின் கீழ் பிரசவ, குழந்தை பராமரிப்பு காரணங்களுக்காக சம்பளமற்ற லீவை எவ்வளவும் பெற்றுக் கொள்ளலாம். என்று சொல்லப்பட்டு இருந்தது 1999.07.20.அன்று வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 16/99 இன் படி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது பிறக்கும் போதே குழந்தை அசாதாரண நிலையில் இருந்தால் மகப்பேற்று நிபுணர் அத்தாட்சிப்படுத்தினால் பிரசவ லீவு முடிந்த பின்னரும் அக் குழந்தை அந்நிலையில் இருந்தால் அக் குழந்தையை விசேடபராமரிப்பு தேவையென குழந்தை வைத்திய நிபுணர் அத்தாட்சிப்படுத்தினால் சேவைக் காலத்தில் ஒரு வருடத்திற்கு உட்பட்டதாக ஆறு மாத காலத்துக்கு அதிகரிக்காத சம்பளமற்ற விடுமுறையை பெற்றுக் கொள்ளலாம் குழந்தைப்பிறப்பு காரணமாக வேறு நோய் உண்டாகி தாய்க்கு மேலும் ஓய்வுதேவை என மகப்பேற்று வைத்திய நிபுணர் அத்தாட்சி செய்யும் சந்தர்ப்பங்களில் மேற் சொல்லப்பட்ட லீவைப் பெற்றுக் கொள்ளலாம்.

பயிலுனர் ஆசிரியர் விடுமுறை

இன்று ஆசிரியர்களுக்கு முதல் நியமனமாக பயிலுனர் ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்படுவது வழக்கமாகியுள்ளது தாபனக்கோவையின் 7ம் பிரிவின் 32ம் பிரிவின் படி முதல் நியமனம் பெற்று 9 மாதம் வரை சம்பளத்துடன் கூடிய எந்த விடுமுறையையும் பெற உரிமையில்லை அதன் பின்னர் வருடம் ஒன்றிற்கு 7 நாட்கள் சமயோசித விடுமுறையும். 14 நாட்கள் சுகவீன விடுமுறையும் பெற்றுக் கொள்ள முடியும்

கட்டாய விடுமுறை

கட்டாய லீவில் அனுமதிக்கப்பட்டார் என்று அடிக்கடி நாம் கேள்விப்படுவதுண்டு ஒழுக்க நடவடிக்கைகளுக்காகவும் சேவை தேவைப்படாது என்பதற்காகவும்.இவ்வாறு கட்டாய விடுமுறையில் அனுமதிக்கப்படுவதுண்டு இவையே ஆசிரியர்கள் விடுமுறை தொடர்பாக அறிய வேண்டிய விடயங்களாகும் இவை தவிர தாமதமாக வருதல் பற்றியும் சிவப்பு கோடு இடுவது பற்றியும் பின்வரும் விபரங்களை தெரிந்து கொள்வது பயன் உள்ளதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982.02.27.இல் கல்வி அமைச்சின் 1981இன் 13ம் இலக்க சுற்றறிக்கை பின்வரும் விபரங்களை கூறுகின்றது. பாடசாலை ஆரம்பமாகி 15நிமிடம் கடந்தவுடன் சிவப்புக்கோடு இட்டு வரவு இடாப்பை மூடுதல் வேண்டும்.

பாடசாலை ஆரம்பமாகிய பின்னர் வேலை செய்யும் மூன்று நாட்கள் தினமும் அரை மணித்தியாலயத்துக்கு குறைந்த காலம் தாமதமாகிபாடசாலை வந்தால் அப்படி தாமதமாகி வருதல் அரை நாள் விடுமுறையாக கொள்ளப்படல் வேண்டும்.

பாடசாலை ஆரம்பமான பின்னர் அரைமணி நேரத்திற்கும் மேற்பட்ட காலம் தாமதமாக வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது அரை நாள் விடுமுறையாக கொள்ளப்படுதல் வேண்டும்.

வழக்கமாக தாமதமாக வரும் ஆசிரியர்கள் தொடர்பாக ஒழுக்க நடவடிக்கைகளுக்கு மேலதிக சுயவிபரக் கோவையில் குறித்து வைப்பதற்காக அது தொடர்பாக கோட்டக்கல்வி அதிகாரி மூலம் வலயக்கல்வி பணிப்பாளருக்கு அறிக்கைஅனுப்ப வேண்டும்.

சம்பளமற்ற விடுமுறை தொடர்பாக சம்பளத்தைக் கழிப்பதற்காக மேலதிகமாகப் பெற்றுள்ளவிடுமுறைக்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு B-100 பத்திரத்தில் அறிவிக்க வேண்டும். வலயக்கல்விப்பணிப்பாளர் இப்பணத்தை தாமதமின்றி கழிக்கின்றாரா என்பதை அதிபர் கவனித்துக்கொள்ள வேண்டும் இதுவே ஆசிரியர்கள் விடுமுறை தொடர்பாக தற்போது பாவிக்கப்படும் சுற்றறிக்கையாகும் இச்சுற்றறிக்கையில் உள்ள குறுகிய கால விடுமுறை தொடர்பாக தகவல்கள் அத்தலைப்புக்களின் கீழ் தரப்பட்டுள்ளன விடுமுறை தொடர்பாக சட்டப்படியான தகவல்கள் இவை என்றாலும் சில பாடசாலை அதிபர்கள் சில பாடசாலை கலாசாரங்களை பேணி வருகின்றார்கள் 8 மணிக்கு நீலக் கோடு 8.15க்கு சிவப்புக் கோடு போன்ற சில விதிமுறைகள் பாடசாலைக்குப் பாடசாலை வித்தியாசப்படுகின்றன. விஞ்ஞான பூர்வமான முகாமைத்துவ தத்துவங்கள் நடை முறைப்படுத்தப்படும் இந்த யுகத்தில் அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலையின் பொது நோக்கத்தை கருத்திற் கொண்டு சட்டங்களை சரியாக அறிந்து கொண்டு முரண்பாடுகள் உண்டாகாதவாறு நடந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசவ லீவு

பொது நிர்வாக சுற்றறிக்கை 4/2005 இலக்க 03.02.2005 திகதிய சுற்றுநிருபத்தின்படி அனுமதிக்கக் கூடிய பிரசவம் தொடர்பான லீவுகள்

பெண் அரச அலுவலர்களுக்கு ஒவ்வொரு பிள்ளைகளுக்குமாக முழுச் சம்பளத்துடன் 84 நாட்கள் பிரசவ லீவும் 84 நாட்கள் அரைச் சம்பளத்துடனும் 84 நாட்கள் சம்பளமற்ற லீவுகளும் 01.02.2005 முதல் அனுமதிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

18.1 முழுச்சம்பளத்துடனான விடுமுறை

நிரந்தர தற்காலிக அமைய அல்லது பயிலுனர் பெண் அரசு ஊழியர்கள் இந்தப்பிரிவின் கீழ் பிரசவ விடுமுறைக்கு உரித்துடையவராவர்.

பெண் அரசு அலுவலரொருவர் உயிருள்ள ஒவ்வெரு பிள்ளை பிறப்புக்கும் முழுச்சம்பளத்துடனான 84 வாரங்கள் நாட்கள் விடுமுறைக்கு உரிதிதுடையவராவர். பிரசவம் நடந்து 04 வாரங்கள் செல்லமுன் அலுவலருக்கு மீண்டும் கடமையைப் பொறுப்பேற்க இடமளிக்கப்படமாட்டாது இந்தப்பிரிவின் கீழ் விடுமுறை பெறுவதற்காக ஒரு வைத்தியச் சான்றிதழோ அல்லது குழந்தையின் பிறப்பு சான்றிதழோ சமர்ப்பிக்க வேண்டும்.

பிரசவ விடுமுறைகளைக் கணிக்கும் போது அந்தக் காலத்துக்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்று கிழமை தினங்களை அதில் உள்ளடக்கக் கூடாது.

இந்த விடுமுறை காலத்தை அலுவலரின் எஞ்சியிருக்கும் விடுமுறைகளிருந்து கழிக்கக் கூடாது என்பதுடன் இந்த விடுமுறைக் காலத்தை முழுச்சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருத வேண்டும்.

> தரங்குறைந்த வைத்தியர்களினால் மக்களினுடைய ஆரோக்கியம் பாதிக்கப்படும்.
> தரம் குறைந்த ஆசிரியர்களினால் மாணவர்கள் சீர்கெட்டு நாடே பாழடையும்.
> - ஆசிரியர். வைரணி வால்த்தி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கும்போதே மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளை பிறப்பிலும் பிரசவத்திலிருந்து 06 வாரங்கள் செல்ல முன் குழந்தை மரணிக்கின்ற சந்தர்ப்பத்திலும் குழந்தையின் மரண சான்றிதழைச் சமர்பிக்கும்மிடத்து விசேட சம்பளத்துடனான விடுமுறையாகப் பிள்ளை பிறப்பு நிகழ்ந்த திகதி முதல் 06 வாரகால விடுமுறை வழங்கவேண்டும்.

18.2 அரைச்சம்பள பிரசவ விடுமுறை

முழுச்சம்பள லீவு 84 நாட்கள் முடிவடைந்த பின் குழந்தையை பராமரிப்பதற்காக 84நாட்கள் அரைச்சம்பள லீவைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

இந்த காலகட்டத்திற்குட்பட்ட சனிக்கிழமை ஞாயிற்றுக் கிழமை பிரசித்த லீவு நாட்கள் யாவும் உள்ளடக்கப்பட வேண்டும்

18.3 சம்பளமற்ற பிரசவ விடுமுறை

முழுச்சம்பள லீவு 84 நாட்களும் பெற்றபின் மேலும் பிள்ளையை பராமரிப்பதற்காக தேவைப்பட்டு விண்ணப்பின் 84 நாட்கள் சம்பளமற்ற லீவுக்கு உரித்துடையவராவார்.

லீவுகள் கணக்கீடு செய்யப்படும் போது சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை பிரசித்த லீவு விடுமுறை என்பன உள்ளடக்கப் பட வேண்டும்

சம்பளமற்ற லீவினை அனுமதிப்பதற்கு முன்பு திணைக் களத் தலைவர் திருப்தியான ஒழுக்குகள் செய்து முற்பணக் கணக்கு கடன் மாதாந்த தவணைப்பணம் என்பனவற்றைக் கழிப்பதற்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

> ***ஆசிரியத்துவப்பணியினால் வெளிக்கொணரப்படும் ஒவ்வொரு மாணவர்களிடமும் மனித நேயம் மலர்ந்திருக்க வேண்டும் நாம் கற்பிக்கும் எல்லாக் கலைகளும் இம்மனித நேயத்துக்கு மாணவர்களை உருவாக்காவிட்டால் அப்பணியை சுமக்க வேண்டியவர்கள் ஒவ்வொரு ஆசிரியர்களுமே.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.4 கருச்சிதைவிற்கான விடுமுறை

இவ்விடுமுறை அவசியமாயின் வைத்தியச் சான்றிதழின் பேரில் விடுமுறைக்கு உரித்தான ஒய்வில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அங்கீகரிக்கப்பட்ட 84 நாட்கள் பிரசவகால லீவு முடிவடைந்த பின் 84 நாட்கள் அரைச்சம்பள லீவு எடுக்காத பட்சத்தில் தனது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதற்கு வழமையாக சேவை நிலையத்திலிருந்து புறப்படும் நேரத்துக்கு 1 மணித்தியாலயத்துக்கு முன் சேவை நிலையத்திலிருந்து புறப்பட அனுமதி வழங்கப்பட வேண்டும் இந்த அனுமதி வழங்கும் காலம் குழந்தையின் 6 மாதகாலம் பூர்த்தியாகும் வரை மட்டும் ஆகும்.. மேலும் பெண் அரச அலுவலர் ஒருவர் கர்ப்பமுற்று 5 மாதகாலம் ஆகும் போது கடமை நேரத்துக்கு ½ மணித்தியாலம் தாமதமாக வருகை தரவும் வழமையாக சேவை நிலையத்திலிருந்து புறப்படும் நேரத்துக்கு ½ மணித்தியாலம் முன்னதாக புறப்படவும் இடமளிக் கப்படுகிறது இந்தச் சலுகை இடமளிக்கப்படுவது அலுவலர் பிரசவ லீவு பெறப்படும் வரை ஆகும்.

நல்லாசிரியரில் மிளிரும் பண்புகள்

* அதிபரோடு ஒத்துழைப்புடன் பணிபுரிவார்.
* ஆசிரியர் குழாத்தோடு சிறந்த தொடர்பை வைத்திருப்பார்.
* மாணவர்களின் நெருங்கிய ஆலோசகராக இருப்பார்.
* தம் தொழில் சார் திறன்களை மேம்படுத்திக்கொள்ள முனைவார்.
* மாணவ அபிவிருத்திக்கான அவரது அர்ப்பணிப்பு உயரிய மட்டத்தில் காணப்படும்.
* நித்தம் புதியனவற்றைத் தேடிய வண்ணம் அவற்றுக்கு ஏற்ப மாற்றமடைவதற்கான சாத்திய வழிகளை தெரிந்து எடுப்பார்.
* பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையே உள்ள தொடர்புகள் வாயிலாகத் திருப்தியடைவார்.
* மாணவருக்கு உதவுகையில் களைப்படைய மாட்டார்
* பாடத்துக்கு புறம்பான கருமங்களின் போது முன்னணியில் நின்று செயற்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பற்றிய சுயமதிப்பீடு

(1) தனிப்பட்ட குணநலன்கள்

1. நான் பாடசாலைக்கு நேரம்தவறாது வருகைதந்து என்னுடைய கற்பித்தலையும் கடமைகளையும் சரிவர செய்கின்றேனா?
ஆம் / இல்லை

2. பாடசாலை பேரவைக் கூட்டங்களுக்கும் ஆசிரியர்கள் கூட்டங்களுக்கும் மற்றும் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட ஏனைய கூட்டங்களுக்கும் தவறாது கிரமமாக சமுகம் கொடுக்கின்றேனா? ஆம் / இல்லை

3. நான் மிகவும் குறைவாகவே லீவு எடுப்பதுடன் தேவையான லீவுகளை முடிந்த வரை முன்கூட்டியே திட்டமிட்டு எடுக்கின்றேனா? ஆம் / இல்லை

4. நான் பண்பாக உடையணிந்து கொள்கின்றேனா?
ஆம் / இல்லை

5. என்னுடைய நடத்தை முன்மாதிரியாக அமைந்துள்ளதா?
ஆம் / இல்லை

6. தன்னலமற்ற வேலைக்கு ஆயத்தமாக இருக்கின்றேனா?
ஆம் / இல்லை

(2) பாடவிதான கற்பித்தல் நிகழ்ச்சி திட்டம்

7. என்னுடைய நேரசூசி என்னிடம் உண்டா? ஆம் / இல்லை

8. எனக்கு கொடுக்கப்பட்ட நேரசூசியின்படி நான் கற்பிக்க வேண்டிய வகுப்புக்களில் பாடவிதான உள்ளடக்கம், வழி காட்டி ஆகியவற்றை நான் நன்கு அறிந்து கொண்டுள்ளேனா?
ஆம் / இல்லை

9. நான் வாராந்த நாளாந்த பாடக்குறிப்புக்களை கிரமமாக எழுதுகின்றேனா? ஆம் / இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நான் கற்பிக்க வேண்டியவற்றின் வருடாந்த, தவணைரீதியான வாரரீதியான பாடத்திட்டங்களை தயார்செய்துள்ளேனா?
ஆம் / இல்லை

11. வகுப்புப்பாடப் பதிவுப் புத்தகங்களில் என்னுடைய வேலை களைக் கிரமமாக எழுதுகின்றேனா? ஆம் / இல்லை

12. மாணவரைப் படிக்கத்தூண்டும் என்னுடைய முயற்சிகள் வெற்றியளிக்கின்றனவா? ஆம் / இல்லை

13. பாடம் சம்மந்தமாக கலந்துரையாடுவதற்கும் செயற்றிட்டங் களில் ஈடுபடுவதற்கும் மாணவரை நான் தூண்டுகின்றேனா?
ஆம் / இல்லை

14. பாடசாலையில் உள்ள போதனா உபகரணங்களை நான் எனது கற்பித்தலின் போது உபயோகிக்கின்றேனா?
ஆம் / இல்லை

15. மேலதிகமாகத் தேவைப்படும் போதனா உபகரணங்களைப் பெற்றெடுக்க நான் முயற்சிக்கின்றேனா? ஆம் / இல்லை

எப்பொழுதும் ஒரு ஆசிரியன்!

* **கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.**
* **நல்ல நூல்களை தேடிக்கொண்டிருக்க வேண்டும்.**
* **வாசித்துக் கொண்டிருக்க வேண்டும்.**
* **புதிது புதிதாக எழுதிக் கொண்டிருக்க வேண்டும்.**

அப்பொழுதே அவர்வாழும் சமூகம்

* **ஏமாற்றப்படாது இருக்கும்.**
* **எழுச்சி பெற முடியும்.**
* **தலை நிமிர்ந்து நிற்க முடியும்.**
* **தனித்துவமாக வாழ முடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச புகையிரத ஆணைச்சீட்டு

சம்பள அளவுத்திட்டமும் பயணம் பண்ணகூடிய வகுப்பும்
(PAC 15/2003 சுற்று நிருபப்படி)

ஒரு வருடத்தில் 100440/- அதற்கு மேலும்	1ம் வகுப்பு
ஒருவருடத்தில் 77340/-ரூபாவும் அதற்கு மேலும்	2ம் வகுப்பு
ஏனையோர்	3ம் வகுப்பு

06/2006 சுற்றுநிருப சம்பள தரத்தின் படி
ஆரம்பதரம் 2ம் வகுப்பும், 1ம், 2ம் நிலைத்தரம் சம்பள
பெறுபவர்களுக்கு 1ம் வகுப்புமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலகருக்கு உரித்தான எண்ணிக்கை

ஒரு அலுவலகருக்கு வருடமொன்றுக்கு ஆறு தனிச்சீட்டுக்கள் அல்லது போய்த்திரும்புவதற்கு என மூன்று ஆணைச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். புதிய நியமனம் பெற்றவர்களாயின் அந்த குறிப்பிட்ட நிதியாண்டில் எஞ்சியுள்ள மாதங்களில் எண்ணிக்கையின் விகிதாசாரமாக இருக்கும்.

அலுவலரின் குடும்பம்

ஒரு அலுவலர் விவாகமானவராயின் அவரது மனைவி கணவன் மற்றும் 18 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் அவர்களால் பராமரிக்கப்படும் திருமணமாகாத பெண்பிள்ளைகள் ஆகியோர் இலவச புகையிரத ஆணைச்சீட்டுக்களைப் பெறுவதற்கு உரித்துடையோராவார்.

ஒரு அலுவலர் விவாகமாகாதவராக அல்லது தாரமிழந்தவராக இருப்பின் அவரது தாய் தந்தை விவாகமாகாத சகோதரிகள் அவரால் பாராமரிக்கப்படுவார் என பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்துமிடத்து இவர்களுக்கான ஆணைச்சீட்டுக்கள் வழங்கப்படும். அலுவலர் அல்லது அவரது சகோதரிகள் திருமணம் முடித்த பின் அச்சலுகை அற்றுப்போகும்.

கணவன் மனைவி இருவரும் அரச ஊழியராக இருப்பின்

கணவன் வேலை செய்யும் இடத்திலையே ஆணைச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். இருவரிலும் கூடுதலாகச் சம்பளம் பெறுபவரின் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு புகையிரத ஆணைச்சீட்டு வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைச்சீட்டுக்கு விண்ணப்பித்தல்.

இதற்கெனக் குறித்த விண்ணப்படிவத்திலே (இல.பொது 21) அலுவலர் அல்லது ஆசிரியர்கள் புகையிரத ஆணைச்சீட்டுக்கு விண்ணப்பிக்கவேண்டும் பயணம் செய்வதற்கு உத்தேசித்த திகதியில் இருந்து ஏழு நாட்களுக்கு ஒருவர் ஆணைச் சீட்டினைப் பயன்படுத்தலாம்.

பயன்படுத்தாத ஆணைச்சீட்டுக்கள்

ஒருமுறை பெற்றுப்பயன்படாத புகையிரத ஆணைச்சீட்டினை அதனை விநியோகித்த அதிகாரமளிக்கப்பட்ட திணைக்களத் தலைவர் அல்லது அதிபரிடமே திருப்பி ஒப்படைத்தல் வேண்டும் அதனை மீண்டும் பொறுப்பேற்கும் அலுவலர் இரத்துச் செய்ய வேண்டும்.

cancelled அல்லது இரத்துச்செய்யப்பட்டுள்ளது என எழுதி அதனை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.

கடமைக்காக புகையிரத ஆணைச்சீட்டுக்கள்

கடமையின் பொருட்டுச் செல்வதற்கான புகையிரத ஆணைச்சீட்டுக்களை ஆசிரியர்கள் கல்வி திணைக்களத்திலேயே பெற்றுக் கொள்ளவேண்டும் அல்லது திணைக்கள தலைவர் எழுத்து மூலம் அதிபருக்கு அறிவித்தல் வழங்கமுடியும்.

இத்தகைய புகையிரத ஆணைச்சீட்டுக்களை ஆசிரியர் அல்லது அலுவலர் ஒருவர் பெற்றுக்கொள்வதற்கான உரிமை இருந்த போதும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் வசிப்பவர்கள் அதன் நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர். முன்னர் உள்ளூர் விமானப்பயணச் சீட்டுகளுக்கான தொகைக்குச் சமமான எண்ணிக்கையில் ஆகக் கூடிய தூரத்திற்கான புகையிரத ஆணைச்சீட்டுக்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் விமானத்தில் பயணம் செய்வதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றுஅந்த வாய்ப்புக்கூட இல்லாத நிலையில் பல அலுவலர்கள் தமது இலவச பிரயாண வாய்ப்புக்களை இழந்து வருவதாகக் குறை கூறப்பட்டு வருகின்றது.

இத்தகைய வாய்ப்புக்களை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்க மாகாணக்கல்வி அமைச்சோ அல்லது கல்வி அமைச்சோ முயற்சிக்குமாயின் பயணச்சுமைகளினால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பல நூற்றுக்கணக்கான அரச அலுவலகர்கள் நன்மையடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாடவிதான முக்கியத்துவம்

மனிதனை பூரணத்துவமுடையவனாக ஆக்குவதே கலைத் திட்டத்தின் நோக்கம். மனிதன் சமூகத்தோடு சேர்ந்து வாழ வேண்டியவன். சமூகவாழ்க்கைக்குரிய அறிவு அனுபவங்களில் பெரும் பகுதியை பாடசாலைகளிலேயே பெற வேண்டி உள்ளது. இதனால் பாடசாலை அனைத்தும் முழுமையான கல்வியை வழங்கக்கூடிய பயன் மிக்கநிறுவனமாக மிளிர வேண்டும். வகுப்பறைகளில் பெறும் அறிவை மட்டும் கல்வி என்று கருதிவிட முடியாது. உடல், உள, சமுதாய பண்பாட்டு, ஆன்மீக வளர்ச்சி களையும் வளர்ப்பதுதான் உண்மையான கல்வி. இக்கல்வியை பெற இணைப்பாடவிதான முயற்சிகள் அவசியம் தேவை.

கல்வியோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாடு டைய மாணவர்கள் வகுப்பறைக் கல்வியிலும் சிறந்து விளங்கு கின்றனர். இணைப்பாடவிதான செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடாத மாணவர்கள் கூட பார்த்து மகிழ்ந்து பயனடைகின்றனர். வகுப்பறைக் கற்றலில் நாட்டமற்று பாடசாலையை வெறுத்த மாணவர்கள் இணைப்பாடவிதான முயற்சிகளினால் கவரப்பட்டு பாடசாலை சென்று கல்வி கற்று உயர்ந்த சம்பவங்கள் நிறைய உண்டு.

இணைப்பாடவிதான முயற்சிகள் காலத்துக்கு காலம் நடைபெறுகின்ற நிகழ்வுகளாக வராது ஒழுங்காக திட்டமிட்டு வருடம் முழுவதும் சீராக நடைபெறுகின்ற பயன்மிக்க நிகழ்ச்சி யாக நடை பெற வேண்டும்.

இணைப்பாடவிதான முயற்சிகளினால் மாணவர்களிடம் வளரக்கூடிய பண்புகள்

1. நல்ல தேகாரோக்கியம் /உயரிய சிந்தனை.
2. வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கும் மனப்பக்குவம்.
3. உணர்ச்சிவசப்படாது சமநிலையில் இருத்தல்.
4. திரிகரன சுத்தி / மனக்கட்டுப்பாடு.
5. கூட்டுறவு மனப்பாங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. குழு முயற்சி / பொறுமை

7. அன்பு சகோதரத்துவம் சமத்துவம்

8. தலைமைத்துவப் பண்புகள்.

9. விரக்தியின்மை மன அமைதி சாந்தம்

10. சமூதாய விழுமியங்களில் விருப்பு

11. சமூக இசைவாக்கம்.

12. தேசியப்பற்று போன்றன.

பாடசாலைகளில் செயற்படுத்தக் கூடிய இணைப்பாடவிதான முயற்றிகளில் சில.

01. விளையாட்டுக்களும், உடற்பயிற்சிகளும்.
02. அணிவகுப்பும், உடற்பயிற்சிக் காட்சிகளும்.
03. பாண்டு வாத்தியம் / இசைக்குழு
04. முத்தமிழ் மன்றம் / விவாத அரங்கு / பட்டிமன்றங்கள்.
05. பாட சம்பந்தமான கழகங்கள்
06. சாரணியம் / பெண்கள் வழிகாட்டி அமைப்பு
07. முதலுதவி / சௌக்கியதானச் சங்கம்
08. கடேட்டிங் / துணிவினைச் சங்கம்.
09. கல்விச் சுற்றுலா
10. கலை, கைப்பணிக் காட்சிகள்.
11. பொழுது போக்குத் கழகங்கள்.
12. பாடசாலை முதல்வர் சபை.
13. மாணவர் நலம்
14. சிரமதான இயக்கம்.
15. பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்.
16. சேமிப்பு இயக்கம்.
17. சமய வளர்ச்சி மன்றங்கள்.
18. சமூகசேவை மன்றங்கள்.
19. வாசகர் வட்டம் / எழுத்தாக்கங்கள்.
20. பாடசாலை நூதனசாலை அமைப்பு.

தொழில் அந்தஸ்து என்பது ஊழியங்களின் ஆதரவினாலோ அரசியல் வாதிகள். அதிகாரிகளின் செல்வாக்கினாலோ கிடைப்பதல்ல. தனி ஒருவரின் ஆற்றலினால் கிடைப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாடவிதான முயற்சிகளைத் திட்டமிடலும் செயற்படுத்தலும்

இச் செயற்பாடுகள் பல தரப்பட்ட பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் ஏற்படுத்தக்கூடியவை. எனவே மிக நிதானமாகத் திட்டமிட்டு கவனமாகச் செயற்பட வேண்டும் அத்துடன் பொறுப்பு மிக்க மேற்பார்வையும் இருக்க வேண்டும்.

திட்டமிட்டு செயற்படுதலின் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை

1. பாடசாலை சூழல் சமூகத்திற்கேற்றவைகள்.
2. அங்கீகரிக்கப்பட்டவைகள்.
3. உள்ள வளங்களை மையமாகக் கொண்டவைகள்.
4. பயன்பாடும் விழுமியங்களும் உள்ளவைகள்.
5. மாணவர் தேவைகள் ஆற்றல்களுக்கு அமைவானவைகள்.
6. பௌதீக ஆளணி நிதி வசதிகளுக்கமைவானவைகள்.
7. பெற்றார் பாதுகாவலர் ஒப்புதல் பெற்றவைகள்.
8. எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கக் கூடியவைகள்.
9. ஜனநாயக அடிப்படையில் அமைந்தவைகள்.
10. மாணவர் தொகை பிரிவுகளுக்கு அமைவானவைகள்
11. சட்டதிட்டம் விதிகள் ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கக் கூடியவை.
12. ஒழுங்கான கால அட்டவணையைப் பின்பற்றக் கூடியவைகள்.
13. மதிப்பீடுகள் போட்டிகள் காட்சிகள் வைத்து ஆக்கமளிக்கக் கூடியவைகள்.
14. சம்மந்தப்பட்ட அமைப்புக்களின் அனுமதியும் உதவிகளையும் பெறக்கூடியவைகள்.
15. எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஏற்கனவே நிதானித்து செம்மைப்படுத்தக் கூடியவைகள்.
16. இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பண ஒதுக்கீடுகளும் செலவுகளும் ஒழுங்காகப் பேணப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாடவிதான முயற்சிகளைத் திட்டமிடலும் இணைப்பாடவிதான நிகழ்சித்திட்ட அட்டவணையில் இடம் பெற வேண்டியவையும்.

1. நிகழ்ச்சித்திட்டம்
2. செயற்பாடுகள்
3. நோக்கம்
4. காலவரையறை
5. பங்குபற்றும் மாணவர் பிரிவு / தொகை / ஆண்டு
6. பயிற்றுனர் / பொறுப்பாளர்
7. மேற்பார்வை
8. பயன்பாட்டுக்குறிப்பு / பாதகமான குறிப்புகள்

இணைப்பாடவிதான முயற்சிகளில் சிறந்து விளங்கும் மாணவர்களின் விபரங்கள் அடங்கிய பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும் இப்பதிவேடுகள் பின்வரும் விபரங்களை உள்ளடக்கிய தாக அமையலாம்

1. மாணவரின் பெயர்
2. ஆண் பெண் விபரம்
3. கல்விகற்கும் ஆண்டு
4. வயதுப்பிரிவு
5. விசேட திறமைகள்
6. விளையாட்டாயின் தேசிய உலக சாதனை மட்டத்துடன் இவரின் நிலை என்பன

இப்பதிவேடுகள் ஒழுங்காக பேணப்படுவதனால் சகல போட்டி நிகழ்ச்சிகளுக்கும் மாணவர்களை தெரிவுசெய்து அனுப்புவதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் அத்துடன் குறுகிய காலத்தில் தரமான நிகழ்ச்சிகளைத் தயாரித்துக் கொள்ளவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறையில் ஆங்கிலத்தை உபயோகித்தல்

சர்வதேச மொழியான ஆங்கிலத்தை இலகுவாகப் பயன் படுத்துவதற்கு நாட்டிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் வாய்ப்பளிக் கப்பட வேண்டுமெனப் புதிய கல்வி சீர்திருத்த நடவடிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட முக்கிய அம்சமாகும். இதற்கமைய ஆசிரியர் கள் தம்மால் இயன்ற இலகுவான ஆங்கிலச் சொற்களை மாணவர் களின் தரத்திற்கேற்ப வகுப்பறைகளில் பயன்படுத்துவது விரும்பத் தக்கதாகும். இவைபற்றி சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

1. வகுப்புக்குள் பிரவேசித்தல்.
   (Good Morning)

2. வகுப்பை விட்டு வெளியேறுதல்.
   (Good bye)

3. வகுப்பு நடக்கும் போது கையாளும் ஆங்கிலப் பதங்கள் ஆசிரியர் சைகைகளுடன் (Closes your book) எனக்கூறுதல்.

(உ-+ம்)
கைகளை விரித்து வைத்து, மெதுவாக இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்தல்.

Open your books
சேர்ந்து இருக்கும் கைகளை, மெதுவாக விரித்தல் வேண்டும்.

Stand up
Sit down
Look at (the black board/ the picture)
Listen
Show me (your bood/ pen)
come here
Line up
Make a circle
Get into groups
Clean the black board
Quiet pleas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களை போற்றுதல் (Praising)
Well done
Good work
Good girl / boy

மாணவர்களின் சுகம் விசாரித்தல்.
How are you?
I'm fine, thank you.

ஆசிரியர்கள் தங்கள் ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதற்காகப் பாடசாலையில் உள்ள ஆங்கில ஆசிரியர்களின் உதவியைப் பெறலாம். மாவட்டம் தோறும் செயற்பட்டுவரும் ஆசிரிய வளநிலையங்கள் உங்களுக்கு வேண்டிய உதவிகளை திரும்படச் செய்யும்.

(நன்றி -- விளக்கு -- 2005 ஜனவரி)

"……………… இன்றைய ஆசிரியர்களின் பணி மிகவும் பரந்ததும் விரிந்ததும் என்று துணிந்து கூறலாம். ஆசிரியர் சொல்வதெல்லாம் வேதவாக்கு" என்று மாணவர் கொண்ட காலம் இன்று இல்லை. அவனது சுயகற்றலுக்கும் சுய சிந்தனைக்கும் முன்னுரிமை அளிக்கப்படுவதனால், அவனை நியாயமான முறையில் திருப்திப்படுத்த வேண்டிய ஒரு பாரிய பொறுப்பு இன்றைய ஆசிரியர்கள் எதிர் நோக்கின்றனர். ஆகவே, ஆசிரியர்களும் தாம் பெற்றுக்கொண்ட பயிற்சிகளைப் போதுமாக்கிக் கொண்டு தம்மை இசைவுபடுத்திக் கொள்ள வேண்டிய சேவைக்காலப் பயிற்சியுடன் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு தமது தொழில்சார் திறனை விருத்தி செய்ய வேண்டியுள்ளது.

கலாநிதி ப.கா. பக்கீர் ஜஃபார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியம் பெற ஆயத்தமாகும் ஆசிரியர்கள் முக்கியமாக வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள்.

ஆசிரியர் பணியிருந்து ஓய்வு பெறவுள்ளவர்கள் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் இவைகளை ஆயத்தமாக வைத்திருப்பதன் மூலம் ஓய்வூதியத்தை இலகுவாக பெற்றுகொள்ள முடியும்.

- ஆசிரியர் பதவியில் உறுதிப்படுத்திய கடிதம்.
- வி.அ.இ.ச. இல (W & O P) பத்திரப் பிரதி
- தேசிய அடையாள அட்டை பிரதி.
- சேவை விபரம்
- இறுதி மூன்று வருட லீவு விபரம் D – 100 படிவம்
- இலவச புகையிரத ஆணைச்சீட்டு பெற்ற விபரம் (இறுதி மூன்று வருடங்கள்)
- கடைசியாகப் பெற்ற சேவை நீடிப்புக் கடிதம்
- இ. ஆ. சே வகுப்பிற்கு நியமனம் செய்த கடிதம்
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (ஆசிரியர் மனைவி பிள்ளைகள் ஒவ்வொன்றினதும் மூன்று பிரதிகள்) மூலப் பிரதி
- பாடசாலை உடமைகள் பூரணமாக ஒப்படைத்து விடுவிக்கப் பட்ட அதிபரின் கடிதம்.
- விவாக அத்தாட்சிப் பத்திரம் (மூன்று பிரதிகள்)
- FORM "A" PART I, II SET
- நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய நியமனக் கடிதம்.
- புகைப்படம் ($3^1/_4$ x 2 ½) பிரதிகள்
- மாகாண அரசாங்க சேவைக்கு உள்வாங்கிய கடிதம்
- பதிவு இலக்கம் வழங்கப்பட்ட கடிதம்.
- வரலாற்றுத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Percentage Table for computation of Pensions of Pensioners retiring from 02.12.2004.

Service	25 Yrs.		25 Yrs. 6 Mths.		26 Yrs.		26 Yrs. 6 Mths.		27 Yrs.		27 Yrs. 6 Mths.		28 Yrs.		28 Yrs. 6 Mths.		29 Yrs.		29 Yrs. 6 Mths.		30 Yrs.	
Annual salary at retirement	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.	Un Red.	Red.
Less than 105841	% 85	% 75	% 86	% 76	% 87	% 77	% 88	% 78	% 89	% 79	% 90	% 80	% 90	% 81	% 90	% 82	% 90	% 83	% 90	% 84	% 90	% 85
105841-107100	84	74	85	75	86	76	87	77	88	78	89	79	90	80	90	81	90	82	90	83	90	84
107101-111120	83	73	84	74	85	75	86	76	87	77	88	78	89	79	90	80	90	81	90	82	90	83
111121-113760	82	72	83	73	84	74	85	75	86	76	87	77	88	78	89	79	90	80	90	81	90	82
113761-117720	81	71	82	72	83	73	84	74	85	75	86	76	87	77	88	78	89	79	90	80	90	81
117721-134400	80	70	81	71	82	72	83	73	84	74	85	75	86	76	87	77	88	78	89	79	90	80
134401-178500	79	69	80	70	81	71	82	72	83	73	84	74	85	75	86	76	87	77	88	78	89	79
178501-195300	78	68	79	69	80	70	81	71	82	72	83	73	84	74	85	75	86	76	87	77	88	78
195301-210420	77	67	78	68	79	69	80	70	81	71	82	72	83	73	84	74	85	75	86	76	87	77
210421-289140	76	66	77	67	78	68	79	69	80	70	81	71	82	72	83	73	84	74	85	75	86	76
Over 289140	75	65	76	66	77	67	78	68	79	69	80	70	81	71	82	72	83	73	84	74	85	75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சேவையின் பதவியுயர்வு

இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யும் செயற்பாடு மற்றும் பதவி உயர்வு விதிமுறைகளை மறுசீரமைத்தல் (சுற்றுநிருப இல. 2005/04)

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1995.04.03ம் திகதி இலக்கம் 865/3கொண்ட விசேடவர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான 1997.03.11ம் திகதி கொண்ட 966/5 இலக்கம் மற்றும் 1997.05.14ம் திகதிய 995/6 கொண்ட வர்த்தமானியில் அறிவித்தல் மூலம் மறுசீரமைக்கப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு 1999 ஆகஸ்ட் 11ம் திகதி இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டதுடன் அத்தீர்மானம் கல்விச் செயலாளரின் 1/99சுற்றிக்கை மூலம் வெளியிடப்பட்டது. மேற்கூறப்பட்ட மறுசீரமைப்புகள் 1994.10.06ம் திகதிமுதல் அமுல்படுத்தப்பட்ட இலங்கை அசிரியர் சேவைக்கு ஆசிரியர்களை உள்ளீர்ப்பு செய்யும் போது இடம் பெற்றதாக கூறப்படும் முரண்பாடுகளை நீக்குவதற்காகவும் ஆசிரியர்களின் பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டை திருத்தியமைப்பதற்கும் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு கீழ்க் குறிப்பிட்டவாறு மீண்டும் மறுசீரமைக்கவும் ஆசிரியர்களின் பதவி உயர்வுகளுக்குரிய கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆரம்பத் தேவைகளிலிருந்து விடுவிப்பதற்கும் 2005.01.12ம் திகதி கூடிய அமைச்சரவைகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது அத்தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை ஆசிரிய சேவையின் ஆசிரியர்கள் அவர்கள் தகைமைபெற்றுள்ள வகுப்பிற்கு/ தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக அரச சேவை ஆணைக்குழு சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

2. இதனடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆசிரியர்களை உள்ளீர்ப்பு செய்யும் போது இது வரையில் இருந்த சுற்றறிக்கை ஆலோசனைகளை தாண்டிச் சென்று கீழ்க்குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. 2004.12.31ம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்று அரச பாடசாலைகளில் பயிலுனர் பட்டதாரி அடிப்படையில் சேவையாற்றிய ஆசிரியர்கள் அந் நியமனத்திற்கமைய கடமையைப் பொறுப்பேற்ற தினம் முதல் நிரந்தர பட்டதாரி ஆசிரியர்களாக கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்தல். அச்சேவைக் காலத்தை அவ்வாறே அவர்களது பதவி உயர்விற்காக ஏற்றுக் கொள்வதற்கும் அவ்வாறு உள்ளீர்ப்புச் செய்யும் மற்றும் பதவியுயர்வு பெறுதல் அடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி நிலுவைச் சம்பளம் செலுத்தாது 2005.01.01.ம் திகதி முதல் செலுத்துவதற்கும்.

ii. 2004.12.31ம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்று அரச பாடசாலையில் சேவையாற்றிய பொது ஆசிரியர்கள் மௌலவி பயிலுனர் ஆசிரியர்கள் மற்றும் அவ்வகையில் கருதப்படும் அதற்கு சமமான வேறு ஆசிரியர்கள் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒழுங்கு முறைக்கமைய தகைமை பெற்ற தினம் அல்லது நியமனத்திற்கமைய கடமையைப் பொறுப்பேற்ற தினம் ஆகிய திகதி முதல் பயிற்றப்படாத ஆசிரியர்களாகக் கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு வரும் திகதி உள்ளீர்ப்பு செய்வதற்கும் அக்காலத்தை ஆசிரியர் சேவை பதவி உயர்விற்காக பயிற்றப்படாத ஆசிரியர் சேவைக் காலமாக கருதுவதற்கும் இதனடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவைப் பணம் செலுத்தாது 2005.01.01ம் திகதி முதல் செலுத்துதல்.

iii. 1994.10.06ம் திகதிக்கு முன்னர் ஆசிரியராக நிரந்தர நியமனம் பெற்றவர் அந்நியமனத்தை பெறுவதற்கு முன்னர் அங்கிகரிக்கப்பட்ட பட்டம் பெற்றிருந்தால் அந்நியமனத்திற் கமைய கடமையைப் பொறுப்பேற்ற தினம் முதல் நிரந்தரப் பட்டதாரி ஆசிரியராக கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கும் ஆசிரியர் சேவை பதவி உயர்விற்காக அதன் சேவை காலமாகக் கருதி நடவடிக்கை எடுப்பதற்கும் இதனடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவைப் பணம் செலுத்தாது 2005.01.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. 1994.10.06ம் திகதியளவில் 45 வயதை அல்லது அதனை விட அதிகரித்த தொழிற்றகைமையற்ற பட்டதாரி ஆசிரியர் களின் தொழிற்றகைமையுடன் பட்டதாரி ஆசிரியர்களாகக் கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்தல் மற்றும் அதனடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவை சம்பளக் கொடுப்பனவு இன்றி 2005.10.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும்.

v. 1994.10.06ம் திகதியளவில் அரச சேவை சுற்றறிக்கை 37/92இற்கமைய சிறப்புப்பட்டதாரிகளாகக் கருதி இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்தல் மற்றும் அதனடிப்படையில் உரித்தாகும் சம்பளம் 2004.12.31ம் திகதி வரை நிலுவை சம்பளக் கொடுப்பனவு இன்றி 2005.01.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும்.

vi. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் விவசாயம் தொடர்பாக டிப்ளோமா / மனைப்பொருளியல் டிப்ளோமா / கனிட்ட பல்கலைக்கழக டிப்ளோமா ஆகியன வற்றை இரு ஆண்டு கால டிப்ளோமாவாக அல்லது மூன்று வருடகால அழகியல் டிப்ளோமா ஆகியவற்றில் அவற்றில் ஏதாவதொரு டிப்ளோமா அல்லது பலவற்றை பெற்று 1994.10.06ம் திகதிக்கு முன்னர் அரச பாடசாலை ஒன்றில் ஆசிரிய நியமனம் பெற்ற ஆசிரியர் ஒருவர் அந்நிய மனத்திற்கமைய கடமைப் பொறுப்பேற்ற தினம் அல்லது மேற்கூறப்பட்ட சான்றிதழைப் பெற்ற திகதி ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் பயிற்றப்பட்ட ஆசிரியராகக் கருதி இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கும் அக்காலத்தை பதவி உயர் வுக்காக பயிற்சி ஆசிரிய சேவைக்காலமாகக் கருதி செயற்படுவதற்கும் அதனடிப்படையில் உரித்தாகும் சம்பளத்தை 2004.12.31ம் திகதி வரை நிலுவைச் சம்பளம் இன்றி 2005.01.01ம் திகதி முதல் செலுத்துவதற்கும் நடவடிக்கைஎடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு மறுசீரமைத்தல்.

இதன் முதலாவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது 2005.01.12ம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கமைய இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பு 11வது பிரிவின் 3:2சரத்திற்குக் குறிப்பிடப்பட்ட உபசரத்து சேர்த்துக் கொள்ளப் படுகிறது

(ஏ) மேற்கூறப்பட்ட (அ) மற்றும் (இ) சரத்துக்களில் குறிப் பிடப்பட்டுள்ளவாறு சகல இரு ஆண்டுகளுக்கும் ஒரு புள்ளி வீதம் வழங்கும் போது எஞ்சும் இருப்பு ஒரு ஆண்டு அல்லது அதனை விட அதிகரிக்குமானால் அதன் சேவைக் காலத்திற்காக மேலும் ஒரு புள்ளி வழங்கப்பட வேண்டும்.

(ஐ) மேற்கூறப்பட்ட (ஆ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சகல ஆண்டுகளுக்குமாக ஒரு புள்ளி வீதம் வழங்கும் போது எஞ்சும் ஆறு மாதம் அல்லது அதனை விட அதிகரிக்குமா னால் அதன் சேவைக் காலத்திறகாக மேலும் ஒரு புள்ளி வழங்கப்பட வேண்டும்.

04. விடுவித்தல்

மேற்கூறப்பட்ட 2005.01.12ம் திகதி கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இலங்கை ஆசிரியர் சேவையின் ஏதாவ தொரு வகுப்பு / தரத்தில் உள்ள அதனை விட உயர் வகுப்பு/தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுக்கொள்வதற்காக போதியளவு புள்ளிகளைப் பெற்று பிரமாணக் குறிப்பில் குறிப் பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது சித்தியடைய வேண்டிய கீழ்க்குறிப்பிட்ட தேவைகளிலிருந்து 2004.12.13ம் திகதி வரை விடுவிக்கப்படும்.

i. சேவைக்காலப் பயிற்சி வேலைத் திட்டத்திற்கான பங்கேற்பு.
ii. தொழில் மீளாய்வு சித்தியடைந்திருத்தல்.
iii. தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
iv. பெயர் குறிப்பிடப்பட்ட பாடசாலையில் உரிய சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **ஆசிரிய சேவைக்கு பதவி உயர்வு வழங்கல்.**

இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் ஒழுங்கு விதிகள் மற்றும் மேற்கூறப்பட்ட விடயம்தொடர்பாக 2005.01.12ம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 2004.12.31ம் திகதி வரை மேற்கூறப்பட்டவாறு செயற்பட அரச சேவைக்குழு அங்கீகரித்துள்ளது

i. இலங்கை ஆசிரிய சேவையின் 3ம் வகுப்பின் IIம் தரத்திற்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்ட ஆசிரிய பயிற்சி சான்றிதழ்/ வெளிவாரிப் ' பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை இது வரையில் பெறாத பயிற்றப்படாத ஆசிரிய சேவைக்காலம் 10 ஆண்டுகளைப் பூர்த்திசெய்யும் தினம் அல்லது 1994.10.06 ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினத்திற்கு ஏனைய தகைமைகளை கருத்திற்கொள்ளாது இலங்கை ஆசிரிய சேவையின் மூன்றாம் வகுப்பின் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்.

ii. இலங்கை ஆசிரிய சேவையின் மூன்றாம் வகுப்பின் முதலாம் தரத்தில் பயிற்சி. டிப்ளோமாதாரர் மற்றும் அதற்குச் சமமான தகைமையற்ற பட்டதாரி என மூன்று வகைக்குட்படும் ஆசிரியர்கள் மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்கள் IIIம் வகுப்பின் சேவைக்காலத்திற்குள் உழைத்த 5 புள்ளிகள் பெற்ற தினம் அல்லது 1994.10.06 ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் ஏனைய தகைமைகளைக் கருத்திற்கொள்ளாது 2வது வகுப்பின் IIம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்.

iii. இலங்கை ஆசிரிய சேவையின் 2ம் வகுப்பின் IIம் தரத்தில் பயிற்சி. பயிற்சி டிப்ளோமாதாரர்கள் மற்றும் தொழிற்றகைமை கொண்ட பட்டதாரி ஆகிய ஆசிரியர்கள் மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட பட்டதாரி ஆகிய ஆசிரியர்கள் மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்கள் 2ம் வகுப்பின் IIம் தரத்திற்கு 10 புள்ளிகளை உழைத்துக் கொண்ட ஆசிரியர்கள் ஏனைய தகைமைகளைக் கருத்திற் கொள்ளாது மேற்கூறப்பட்ட 10 புள்ளிகளை ஈட்டிக்கொண்ட தினம் அல்லது 1994.10.06ஆகிய இருதினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் 2வது வகுப்பின் Iம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. இலங்கை ஆசிரிய சேவையின் 2ம் வகுப்பின் I ம் தரத்தின் பயிற்சி டிப்ளோமாதாரர் தொழிற்றகைமை கொண்ட பட்டதாரி மற்றும் அதற்குச் சமமான தகைமை கொண்ட ஆசிரியர்களில் 2ம் வகுப்பின் I ம் தரத்தின் சேவைக்காலத்திற்குள் 5 புள்ளிகளை ஈட்டிக்கொண்ட ஆசிரியர்கள் ஏனைய தகைமைகளைக் கருத்திற் கொள்ளாது மேற்கூறப்பட்ட 5 புள்ளிகளை அல்லது 1994.10.06ம் திகதி ஆகிய இரு தினங்களுக்குப் பின்னர் வரும் தினம் முதல் Iம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கல்.

v. மேற்கூறப்பட்ட 2005.01.31ம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கமைய ஆசிரியர்களின் பதவி உயர்விற்கான காரணியாக இருக்கும் புள்ளிகளைத்தவிர ஏனைய சகல தேவைகளையும் 2004.12.31ம் திகதி வரை விடுவிக்கப்பட்டுள்ளது இதனடிப்படையில் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டிய தினம் 32005.01.01. அல்லது அதற்கு முன்னரான தினமாக இருக்க வேண்டியதுடன் 1994.10.06ம் திகதி அல்லது அதற்குப் பின்னரான தினமாக இருப்பது அவசியமாகும். இலங்கை ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட 2005.01.01.அல்லது அதற்கு முன்னரான தினத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் இதனை பொருத்தமானவாறு உரியதாக்கிக் கொள்ள வேண்டும்.

6. இச்சுற்றிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கமைய உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு அல்லது பதவி உயர்வு பெறுவதனால் ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கும் வேளையில் 2004.12.31ம் திகதி வரை நிலுவைக் கொடுப்பனவின்றி 2005.01.01ம் திகதி முதல் சம்பள உரிமையை வழங்க வேண்டும். மேற்கூறப்பட்ட பதவி உயர்வு வழங்கப்பட்டதன் பின்னர் சம்பளம் தயாரிக்கப்பட வேண்டியது பொதுநிர்வாக சுற்றிக்கை 11/94மற்றும் 7/200 மூலம் மறுசீரமைக்கப்பட்ட தாபன விதிக்கோவையின் viiவது வாசகத்தின் 5வது சரத்திற்கமைவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இச்சுற்றறிக்கையை அமுல்படுத்தும் போது தேவைப்படும் மேலதிக ஒதுக்கீட்டு அளவை மதிப்பீடு செய்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கவும்.

8. இச்சுற்றறிக்கை வெளியிடப்படுவது அரச சேவையின் ஆணைக்குழு சபையின் இணக்கத்துடன் ஆகும்.

9. இதில் குறிப்பிடப்பட்ட மறுசீரமைப்புக்கள் மற்றும் அதற்குரிய ஆலோசனைகளின் பிரகாரம் பதவி உயர்வு பெற உரிமை உள்ள சகல ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வு வழங்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்கவும், இச்சுற்றறிக்கையில் உள்ள ஒழுங்கு விதிகளுக்குமைய நடவடிக்கையை மேற்கொள்ளும் போது ஏதாவதொரு பிரச்சினை ஏற்பட்டால் என்னை தொடர்பு கொள்ளுமாறு மேலும் அறியத்தருகிறேன்.

டாக்டர் தாரா டி மெல்,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

ஒரு வருட பலனை நீ எதிர்பார்ப்பாயானால் விதையை விதை.

பத்து வருட பலனை நீ எதிர்பார்ப்பாயயானால் ஒரு மரத்தை நடு.

நூறு வருட பலனை நீ எதிர்பார்ப்பாயானால் மாணவருக்கு கல்வியை ஊட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் ஐ வித (5 S) எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தல்

5 S முறை என்று அழைக்கப்படும் ஐவித எண்ணக்கருவானது ஜப்பானில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று உலகுகெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஒரு வெற்றிகரமான முகாமைத்துவ செயற்திட்டமாகும். இதன் மூலம் நிறுவனங்கள், பாடசாலைகள் தொழிற்சாலைகள், வீடுகள் போன்ற சகல இடங்களிலும் வேலைகள் சீரமைக்கப்பட்டு விரயங்கள் தடுக்கப்பட்டு சிறந்த பெறுபேறுகளைப்பெற வழியேற்படுகின்றது. இதனை முதலில் அறிமுகப்படுத்தி பெரும் வெற்றியைக் கண்ட நாடே ஜப்பான் ஆகும். இதனை ஜப்பானிய மொழியிலேயே ஓர் ஓசை நயத்துடன் உருவாக்கியுள்ளார்கள்.

5 S Method

1. Seiri - Classify
2. Seition - Organise
3. Seiso - Clean
3. Seiketsy - Standerdise
4. Shitsuke - Self Discipline

1. **செய்ரி** - தேவையற்றதை அகற்றிவிடுதல்.
2. **செய்தேன்** - ஒரு பொருளை அதே இடத்தில் வைத்தல்
3. **செய்சோ** - புனிதமாக வைத்திருத்தல்
4. **செய்கெற்சு** - தரப்படுத்தி வைத்திருத்தல்
5. **செய்சுகி** - பயிற்சி

மேலுள்ள இந்த விதிகளே ஐ வித முறை என அழைக்கப்படுகின்றது. இது பற்றிய பரந்த விளக்கத்தை இலங்கையில் இவ்விடயத்தில் அக்கறை காட்டும் நிறுவனங்களிலிருந்தும், மெலிபன் பிஸ்கட் ஸ்தாபனத்திலிருந்தும் அறிந்துகொள்ளலாம். இங்கு சுருக்கமாக 5 S முறையை விளங்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இன்று பல பாடசாலைகளிலும், பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள் மற்றும் தனியார், அரசு நிறுவனங்கள் தொழிற்சாலைகளிலும் இம்முறை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக இந்நிறுவனங்களின் வினைத்திறன் தன்மை அதிகரித்திருப்பதை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இதனால் எதிர்காலத்தில் இத்திட்டத்தை சகல பாடசாலைகளிலும் செயல்படுத்த கல்வி அமைச்சு எண்ணியுள்ளது. இதனை எமது பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தினால் அது நிச்சயம் பயன்தரு பாடசாலையாக மிளிரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இனி இது பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

கீழே முதலாவது நடைமுறையான ***'செய்றி'*** யை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதனைப் பார்ப்போம். செய்றி என்பது தேவையற்றவற்றை அகற்றி விடுதல் என்பதாகும்.

01. உங்கள் வசமுள்ள காசுப்பை, தினக்குறிப்பு, என்பவற்றைப் பாருங்கள். இப்போது தேவையற்ற கடதாசிகள், குறிப்புக்களை நீக்கிவிடுங்கள் இதற்கு 5 நிமிடங்கள் போதும்.

02. உங்கள் அலுவலக மேசை, இலாச்சி, அலுமாரி என்பவற்றை நோட்டமிடுங்கள் இவற்றுள் 20% ஆன பொருட்கள் தஸ்தாவேஜுகளாவது தேவையற்றவனாக இருக்கும். தேவையில்லாதவற்றை நீக்கிவிடுங்கள். இதனால் உங்கள் வேலை நேரம் கணிசமாகக் குறைவடைவதையும் வேலை இலகுவாக இருப்பதையும் உணர்வீர்கள்.

03. உங்கள் அலுவலக கோவைகளைப் பாருங்கள் எத்தனை கோவைகள் தேவையற்றனவாக இருக்கும். ஒரு விடயத் திற்காக பல கோவைகளை நீங்கள் கூடுதலாக வைத்திருப்பீர் கள். இதனால் உரிய கோவைகளைத் தேடுவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவீர்கள். கோவைகள் தேவையற்ற முறையில் கூடுவதால் இட நெருக்கடியுடன் பாவனைக்குள்ளா காது தூசி படிதலும் நிகழ்கின்றது. இது உங்கள் அலுவல கத்தையும். உங்களையும் வெகுவாக பாதிக்கச்செய்கின்றது. அலுவலகத்தின் தோற்றப்பாடு முற்றிலும் கெட்டுப்போய் விடுகின்றது. எனவே, தேவையற்ற கோவைகளை உரிய நடவடிக்கைகளைப்பின்பற்றி நீக்கி விடுங்கள் அவசியமான பழைய கோவைகளாயின் களஞ்சிய அறைக்கு அனுப்பி விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. அவ்வாறே உங்கள் அலுவலகத்தை நோட்டமிடுங்கள். தேவையற்றவற்றை அகற்றி விடுங்கள்.
05. நிறுவன வெளிப்புறத்தை அவதானியுங்கள் இதன் வளவில் தேவையற்ற பொருட்கள் வருடக்கணக்கில் கிடப்பதை நீங்கள் காணலாம்.

இவற்றை செய்வதற்கு உங்களுக்கு நீண்ட நாட்கள் அவசியமில்லை. இதைச் செய்ய வேண்டுமென்ற எண்ணமே போதும். இதை நீங்கள் தனித்துச் செய்ய முடியாது. இதற்காக ஒரு நாளை ஒதுக்கிக் கொள்ளுங்கள். இந்நாளில் நிறுவனத்திலுள்ள சகல ஊழியர்களையும் ஒன்று சேர்த்து இப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்காலமென உங்கள் ஊழியர்களிடமே ஆலோசனை கேளுங்கள். உங்கள் பிரச்சினையை அல்லது நீங்கள் நினைப்பதை அவர்கள் நிச்சயம் நிறைவேற்றுவர். இதற்காகப் பெருந்தொகை நிவாரணத்தை நீங்கள் செலவழிக்கவேண்டியதில்லை. இக்கூட்டத்தின் ஆரம்பத்தில் 5S என்றால் என்ன? இதன் பலாபலன்கள் என்ன? என்பதை சுட்டிக்காட்டுங்கள். இந் நடவடிக்கைகளை பின்பற்றுமாறு வெறுமனே கடிதங்களை அனுப்பிவிட்டு வாளாவிருக்காதீர்கள். இதனால் பயனேதும் இல்லை. செயலில் இறங்குங்கள். மற்றவர்களுடன் சேர்ந்து நடவடிக்கை எடுங்கள். நிச்சயம் வெற்றி கிட்டும்.

இவ்வாறு உங்கள் பாடசாலை, வீடு பொது இடங்கள் அலுவலகத்தின் பல்வேறு கிளைகள், வாகனப்பகுதி என ஒவ்வொன்றையும் உற்று நோக்குங்கள். உங்கள் நிறுவன பகுதிக் கிளைக்குச் சென்று முகாமையாளர்களுடன் சேர்ந்து நீங்களும் வேலை செய்யுங்கள். நிறுவனத்தின் பல்வேறு உறுப்பினர்களை இவ்வேலைக்கு தாராளமாகப் பயன்படுத்துங்கள். அவர்களுக்கு ஊக்கம் அளியுங்கள். இதன் பயனாக அளவிட முடியாத பலாபலன்களைப் பெறுவீர்கள்.

இங்கே கூறப்பட்ட செய்றியைப் போலவே ஏனைய நான்கு நடவடிக்கைகளாவன.

செய்ரோன்	- ஒரு பொருளை அதே இடத்தில் வைத்தல்
செய்சோ	- துப்பரவாக வைத்திருத்தல்
செய்கெற்சு	- தரப்படுத்தி வைத்திருத்தல்
செய்சுகி	- பயிற்சி

ஆகிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுங்கள் இந்த 5S நடவடிக்கைகளால் பின்வரும் நன்மைகள் உடனடியாக கிட்டுவதை நீங்கள் உணர்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உமது பொருட்கள் இருக்கும் மேசை, கோவைகள் துப்பரவான தோற்றத்துடன் திகழும்.
- உமது அலுவலகத்திற்கு நல்ல தோற்றப் பொலிவை அளிக்கும்.
- உரிய பொருட்களை உரிய இடத்தில் வைத்து பழகுவதால் ஒரு வேலையை இலகுவாக, விரைவாக, புனிதமாக செலவு குறைவாக செய்யலாம்.
- தேடுவதற்கான நேரம் குறைவடையும்.
- வெளியில் இருந்துவரும் வாடிக்கையாளருக்கு உங்கள் அலுவலகம், கடை, அல்லது களஞ்சியம் பற்றி நல்ல எண்ணம் உருவாகும்.
- உள்ளுணர்வுடன் கூடிய மகிழ்ச்சியும் உடற்சுகமும் உருவாகும்.
- நிறுவனத்தின் இலாபம் பெருக வழியேற்படும்.
- உற்சாகமானவர்களை அல்லது வேலை முடக்கிகளை வேலை செய்யத் தூண்டுவீர்கள்.
- எல்லோரும் சேர்ந்து செயற்படும் போது மனதிற்கு மகிழ்ச்சியும் நல்ல கருத்துப் பரிமாற்றமும் உருவாகும். உங்கள் தனிப்பட்ட வாழ்வு வீடு என்பவற்றிலும் இந்த எண்ணம் உருவாகும்.

5S நடைமுறைகளின் போது பின்வரும் நடவடிக்கைகளை முகாமை பின்பற்ற வேண்டும்.

- முதலில் 5S சம்பந்தம்மான விளக்க கூட்டத்தைக் கூட்டுங்கள். இக்கூட்டத்தில் நீங்கள் அறிந்து கொண்ட விடயங்களை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரண்டாவது கூட்டத்தில் எமது நிறுவனத்தில் 5S நடைமுறைகளை பின்பற்ற என்ன வழிமுறைகள் பின்பற்றப்படலாம் என்பதை உங்கள் ஊழியரிடமே கேளுங்கள். உங்களுக்கு வழிமுறைகள் தெரிந்திருப்பின் அவற்றைப் பற்றி இப்போது கூறாதீர்கள்.

- ஐ வித விதிமுறைகளைப் பின்பற்றுவதற்காக தினங்களை ஒதுக்குங்கள்.

- இவற்றை நடைமுறைப்படுத்த குழுவொன்றை நிறுவுங்கள். அக்குழுவில் சகல மட்டத்திலும் உள்ளவர்கள் பங்குபற்று கிறார்களா என்பதை அவதானியுங்கள். அக்குழுவில் ஏழு அல்லது எட்டுப் பேர் இருந்தால் போதுமானது என்பதை நினைவில் வையுங்கள்.

- ஆரம்பத்தில் நிறுவனத்தின் அலுவலகம் அதன் ஒவ்வொரு பகுதி இடங்கள், களஞ்சியம் முகப்பு ஆகியவற்றின் தோற்றப்பாட்டை விளக்கும் ஒவ்வொரு புகைப்படத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

- 5S இன் முன்னேற்றம் பற்றி அறிவித்தல் பலகையில் வாரம் தோறும் வெளியீடுகள், படங்கள், வரைபடங்களைத் தயாரித்து வெளிப்படுத்துங்கள்.

- 5S நடவடிக்கைகளை ஆரம்பியுங்கள். இதற்கு வேறான சில மணித்தியாலங்களை அல்லது தினங்களை ஒதுக்குவது பொருத்தமானது. குழுவாக வேலை செய்யும் வகையில் அட்டவணையைத் தயாரியுங்கள்.

- 5S சம்பந்தமான போட்டிகளை நடாத்தி மீண்டும் புகைப்படங்கள் எடுத்து மாற்றங்களை பலரும் அவதானிக்கக் கூடியவாறு அறிவித்தல் பலகையில் வெளியிடுங்கள்.

- 5S பற்றி நிறுவனத்திற்கு வெளியில் உள்ள நிறுவனங்களுக்கு விளக்கக் கூட்டங்களை நடாத்துங்கள். இதன் மூலம் நிறுவனம் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை வெளியில் உள்ளவர்களுக்கு ஏற்படுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SALARY FROM 01.01.2006 AS PER P.A.C. NO 06/2006

	S.L.T.S. 3-II			S.L.T.S. 3-I			S.L.T.S- 2-II S.L.P.S. 3		
	TS 1-2006			TS 2-2006			TS 2-2006 / TS 3-2006		
	Rs.12,920-10x120 - 5 x 150 - 14,870			Rs.13,790 - 09 x 150 - 15,140 - 16,040			Rs.15,350-05x210-4x300-17,600-19,400		
	P.A.C 9/2004 31.12.2005	P.A.C 06/2006 01.01.2006	★ P.A.C 06/2006 01.01.2007	P.A.C 9/2004 31.12.2005	P.A.C 06/2006 01.01.2006	★ P.A.C 06/2006 01.01.2007	P.A.C 9/2004 31.12.2005	P.A.C 06/2006 01.01.2006	★ P.A.C 06/2006 01.01.2007
1	7,675.00	11,347.50	12,920.00	8,345.00	12,167.50	13,790.00	9,360.00	13,465.00	15,350.00
2	7,785.00	11,462.50	13,040.00	8,455.00	12,297.50	13,940.00	9,565.00	13,662.50	15,560.00
3	7,795.00	11,577.50	13,160.00	8,565.00	12,427.50	14,090.00	9,770.00	13,870.00	15,770.00
4	7,905.00	11,692.50	13,280.00	8,675.00	12,557.50	14,240.00	9,975.00	14,077.50	15,980.00
5	8,015.00	11,807.50	13,400.00	8,785.00	12,687.50	14,390.00	10,180.00	14,284.00	16,190.00
6	8,125.00	11,922.50	13,520.00	8,895.00	12,817.50	14,540.00	10,385.00	14,511.75	16,400.00
7	8,235.00	12,037.50	13,640.00	9,005.00	12,947.50	14,690.00	10,590.00	14,774.50	16,700.00
8	8,345.00	12,152.50	13,760.00	9,115.00	13,077.50	14,840.00	10,880.00	15,064.00	17,000.00
9	8,455.00	12,267.50	13,880.00	9,225.00	13,207.50	14,990.00	11,085.00	15,348.75	17,300.00
10	8,565.00	12,382.50	14,000.00	* 9,335.00	13,337.50	15,140.00	* 11,290.00	15,608.50	17,600.00
11	8,675.00	12,497.50	14,120.00	9,465.00	13,477.50	15,290.00	11,495.00	15,872.25	17,900.00
12	8,785.00	12,627.50	14,270.00	9,595.00	13,617.50	15,440.00	11,700.00	16,135.00	18,200.00
13	8,895.00	12,757.50	14,420.00	9,725.00	13,757.50	15,590.00	11,905.00	16,397.75	18,500.00
14	9,005.00	12,887.50	14,570.00	9,855.00	13,897.50	15,740.00	12,110.00	16,660.50	18,800.00
15	9,115.00	13,017.50	14,720.00	9,985.00	14,037.50	15,890.00	12,315.00	16,923.25	19,100.00
16	9,245.00	13,167.50	14,870.00	10,115.00	14,183.25	16,040.00	12,520.00	17,186.00	19,400.00
17				* Promotion bar			* Promotion bar		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.L.T.S- 2-II S.L.P.S. 3			S.L.T.S- 3-I S.L.P.S. 2-II			S.L.T.S-I S.L.P.S. 2-I			S.L.P.S-I		
TS 2-2006 / TS 3-2006			TS 2-2006 / TS 3-2006			TS 2-2006 / TS 3-2006			TS 3-2006		
Rs.15,350-05x210-[illegible]-17,600-19,400			Rs.17,900-08x350-20,700-[illegible]			Rs. 21,345 - 11 x 645 - 28,440 - Ts Rs. 21,345 - 18 x 645 - 32,955 - Pr			Rs. 21,990 - 17 x 645 - 32,955		
P.A.C 9/2004 31.12.2005	P.A.C 06/2006 01.01.2006	★ P.A.C 06/2006 01.01.2007	P.A.C 9/2004 31.12.2005	P.A.C 06/2006 01.01.2006	★ P.A.C 06/2006 01.01.2007	P.A.C 9/2004 31.12.2005	P.A.C 06/2006 01.01.2006	★ P.A.C 06/2006 01.01.2007	P.A.C 9/2004 31.12.2005	P.A.C 06/2006 01.01.2006	★ P.A.C 06/2006 01.01.2007
9,360.00	13,455.00	15,350.00	11,295.00	15,799.75	17,900.00	13,580.00	18,741.50	21,345.00	14,040.00	19,317.00	21,990.00
9,565.00	13,662.50	15,560.00	11,636.00	16,124.25	18,250.00	14,225.00	19,418.75	21,990.00	14,655.00	19,994.25	22,635.00
9,770.00	13,870.00	15,770.00	11,895.00	16,436.75	18,600.00	14,625.00	19,994.25	22,635.00	15,145.00	20,569.75	23,280.00
9,975.00	14,077.50	15,980.00	12,135.00	16,749.25	18,950.00	15,145.00	20,569.75	23,280.00	15,655.00	21,145.25	23,925.00
10,160.00	14,284.00	16,190.00	12,385.00	17,061.75	19,300.00	15,605.00	21,145.25	23,925.00	16,162.50	21,766.88	24,570.00
10,365.00	14,511.75	16,400.00	12,635.00	17,374.25	19,650.00	16,162.50	21,766.88	24,570.00	16,775.00	22,433.75	25,215.00
10,580.00	14,774.50	16,700.00	12,885.00	17,686.75	20,000.00	16,775.00	22,433.75	25,215.00	17,387.50	23,093.13	25,860.00
10,880.00	15,084.00	17,000.00	13,135.00	17,999.25	20,350.00	17,387.50	23,093.13	25,860.00	18,000.00	23,762.50	26,505.00
11,085.00	15,346.75	17,300.00	* 13,385.00	18,311.75	20,700.00	18,000.00	23,752.50	26,505.00	18,612.50	24,411.88	27,150.00
* 11,290.00	15,609.50	17,600.00	13,635.00	18,624.25	21,050.00	18,612.50	24,411.88	27,150.00	19,225.00	25,071.25	27,795.00
11,495.00	15,872.25	17,900.00	13,885.00	18,936.75	21,400.00	19,225.00	25,071.25	27,795.00	19,837.50	25,730.63	28,440.00
11,700.00	16,135.00	18,200.00	14,135.00	19,249.25	21,750.00	19,837.50	25,730.63	28,440.00	20,450.00	26,390.00	29,085.00
11,905.00	16,397.75	18,500.00	14,385.00	19,561.75	22,100.00	20,450.00	26,390.00	29,085.00	21,062.50	27,049.38	29,730.00
12,110.00	16,660.50	18,800.00	14,635.00	19,874.25	22,450.00	21,062.50	27,049.38	29,730.00	21,675.00	27,708.75	30,375.00
12,315.00	16,923.25	19,100.00	14,885.00	20,186.75	22,800.00	21,675.00	27,708.75	30,375.00	22,287.50	28,368.13	31,020.00
12,520.00	17,186.00	19,400.00				22,287.50	28,368.13	31,020.00	22,900.00	29,027.50	31,665.00
Promotion bar			* *Promotion bar*			22,900.00	29,027.50	31,665.00	23,512.50	29,686.88	32,310.00
						23,512.50	29,686.88	32,310.00	24,125.00	30,346.25	32,955.00
						24,125.00	30,346.25	32,955.00			

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய ரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே.

(முத்து ....)

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளிவரும் பிஞ்சுப்பாலகனாக அவன்
தன்னந்தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்.

(முத்து ....)

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்.

(முத்து ....)

கற்பித்தல், கற்றல் திகழ்ந்திடவே - நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்.

(முத்து ....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப் பெருந்தகைகளே...!

நாம் எமது பிள்ளைகளை
உங்களிடம் ஒப்படைத்துள்ளோம்
அவர்களது ஆத்மா பவித்திரமானது
அவர்களது இதயம் நிர்மலமானது
அவர்களது மனது அறிவுத்தாகமுடையது ...

எமது எதிர்காலம் ...
எமது எதிர்பார்ப்புக்கள் ...
சர்வமும் எங்கள் பிள்ளைகளே ...!

ஆசிரியப் பெருந்தகைகளே ...
அறிவீர்களா, நீங்கள்
நாம் உங்கள் மீது வைத்துள்ள
நம்பிக்கை மிக மிகப் பெரியது...

- பெற்றோர்கள் -

இன்று பாடசாலைகள் வர்த்தக,, வாணிப நிறுவனங்களாகி விட்டன. ஆசிரியர்கள் வியாபாரிகளாகவும், மாணவர்கள் நுகர்வோர்களாகவும் உள்ளனர். கல்வி என்பது இன்று வர்த்தக அல்லது வாணிப சொத்தாகிவிட்டன. ஆகவே பாடசாலைகள் இப்போது இறந்துவிட்டன.

ஜேர்மனிய கல்வியலாளர் இலீச்

அறியாமை இருள் அகற்றும் ஆசிரியர்களே!

இந்தச் சவால்களை எமது கால கட்டத்தில் முறியடித்து ஆசிரியர் பணியினை அழகுறச் செய்துகாட்டி அளவிலாப் பயனை அனைவரும் பெற அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளி நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்

- மகாகவி பாரதியார்

ஆசிரியர்களின் அந்தஸ்த்து பற்றிய யுனெஸ்கோவின் 1996ம் ஆண்டு அறிக்கையில் கோட்பாடு - 6 இன் விதந்துரை

"கற்பித்தல் ஓர் உயர்வாண்மைத் தொழிலாகக் கருதப்பட வேண்டும். அது பொதுச் சேவையுடன் அடங்கும் வகைகளுள் ஒன்றாகும். ஆசிரியர்கள் நிபுணத்துவ அறிவு, விசேட திறன்கள் என்பவற்றைச் சிரத்தையுடனும் தொடர்கல்வி நெறிகள் மூலமும் பெற்றுப் பேணிவர வேண்டுமென இப்பொதுச்சேவை வேண்டி நிற்கிறது."

நன்கு கற்றால் செயல் திறன் பெறலாம். செயல் திறத்தால் ஆக்கபூர்வமான எண்ணங்கள் பரிணமிக்கும். ஆக்கபூர்வமான எண்ணங்கள் அறிவுக்குச் சக்தியாக மிளிரும். அந்த அறிவு நம் வாழ்வை வளமாக்கும்

- இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org